# காஞ்சி

நிறுவனர்

அண்ணா

15-9-68

விலை 20 காசு





# இது எழுதாத கடிதம்

— தென்னரசு —

இதயம் நிறைந்த ஜேக்குலீனுக்கு,

இன்பக் கனவுகளோடு உன்னைவிட்டுப் பிரிந்து வந்தேன். இவ்வளவு நாட்களாகக் கென்னடியை நினைக்கும் போதுதான் ஜேக்குலீன் என்ற பெயர் எனக்கு நினைவுக்கு வந்து கொண்டிருந்தது. ஆனால், உன்னைச் சந்தித்த பிறகு உன்னை நினைக்கும் போதுதான எனக்குக் கென்னடியின் பெயர் நெஞ்சுக்கு வருகிறது.

உனக்கு, உன் பெற்றோர்கள் புகழ்பெற்ற பெயரை எப்படியோ சூட்டி விட்டார்கள். எனக்கு அப்படி இல்லை. உனக்காக நான் 'கென்னடி' என்று புனைப்பெயர் வைத்துக் கொள்ளலாமா? என்று கூடத் தோன்றுகிறது. ஜேக்குலீன் என்ற வார்த்தைக்கு என்ன பொருளாக இருந்தாலும், என்னைப் பொறுத்த வரை 'அழகி' என்றுநான் தீர்மானித்திருக்கிறேன். உன்னைக் காட்டிலும் அழகிகள் இருப்பதாக நீ நினைக்கலாம். அது தவறு. அழகு என்பது யாரும் வரையறுத்து அறிவித்த தீர்ப்பல்ல.

இது அழகு, இது ஆபாசம் என்று எவரும் முடிவெடுத்துவிடமுடியாது. உனக்கு அழகியாகத் தெரிபவள், எனக்கு விகாரமுள்ளவளாகத்தெரியலாம். அதுவும் உன்னைப்பார்த்த பிறகு, வேறு யாரும் அழகியாகத் தெரியவில்லை. ரோஜாவுக்கு ஒரு அழகு, மல்லிகைக்கு ஒரு அழகு, மனோரஞ்சிதத்திற்கு ஒரு அழகு இப்படி ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு கவர்ச்சி உண்டு. சிலருக்கு ரோஜா பிடிக்கிறது. சிலருக்கு மல்லிகை பிடிக்கிறது; வேறு சிலருக்கு மனோரஞ்சிதம் பிடிக்கிறது. ஜூலியட்டின் அழகு ரோமியோவை ஈர்த்ததுபோல், ஜேக்குலீன் அழகு கென்னடியை ஈர்த்ததுபோல் ஒவ்வொரு அழகு ஒவ்வொருவரை வசீகரிக்கிறது. ஆனால், மொத்தத்தில் அழகு என்பது யாரையும் குழப்பக் கூடியதுதான்.

எதற்கும் இளகாதரஷ்யசர்வாதிகாரி குருஷேவ் 'ஜேக்குலீனோடு பேசும்போது எனக்கு மொழிபெயர்ப்பாளரே தேவைப்படவில்லை; நான் அவளுடைய அழகிலேயே லயித்துப் போய்விட்டேன்'' என்றார்.

ஜேக்குலீனின் அழகைப்பற்றி பிரஞ்சு அதிபர் இதைவிடச் சுவையாகச் சொன்னார்:

''அமெரிக்காவிலிருந்து நான் எதையாவது கொண்டுவர எண்ணினால் அது ஜேக்குலீனாகத் தானிருக்கும்'' என்றார் டிகால். ஒரு பெண்ணின் அழகு, ரத்தவாடை, குண்டு வீச்சு, துப்பாக்கிச் சத்தம் அவற்றுள் அடங்கிக் கிடக்கும் சர்வாதிகாரிகளையே மெய் சிலிர்க்கச் செய்யும் போது கற்பனை உள்ளம் கொண்ட ஒரு சிந்தனையாளனைக் குழப்பாமல் இருக்குமா? நீ வேண்டுமானால் மறைக்கலாம்; அலட்சியப்படுத்துவது போல் நடிக்கலாம்; என்னை ஏமாற்ற முடியாது. நீ என்னை விரும்புகிறாய் என்று அறிந்த பின்னர்தான் நான், உன் கருவிழிகளின் தாக்குதலுக்கு இடம் கொடுத்தேன். திருடன, எடுத்த எடுப்பில், தான் திருடன்தான் என்று ஒப்புக்கொள்வதில்லை. அதுபோலத்தான் ஆடவர்களின் இதயங்களைக் களவாடும் விவகாரத்தில் பெண்களும்!

''அவரை நான் விரும்பவில்லை; அவர் வேறு ஜாதி, நான் வேறு ஜாதி; எங்க அம்மாவுக்குத் தெரிந்தால் ஆபத்து! என் அண்ணனுக்குத் தெரிந்தால் விபரீதம்!'' என்று படபட வென்று பேசிக் கொண்டே, மனதுக்குள் தங்கள் காதலைப் படம் போட்டுக் கொண்டிருப்பது தான் உண்மையான, நாணமுள்ள பெண்ணுக்கு அடையாளம்! நீயும் அப்படித்தான்!

நண்பர் சோழன் உன்னை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் எந்த எண்ணத்தோடும் அறிமுகம் செய்து வைக்கவில்லை. அந்த 'எண்ணங்களை' அவருக்குத் தெரியாமல் நீயும் நானும் தான் வளர்த்துக் கொண்டோம், ஒவ்வொரு நாள் இரவு, சலசலப்பும் அரவமும் ஒடுங்கிய பின்னர், வெண் முயலைப்போல, வெள்ளிப் புறாவைப்போல் ஓசைப் படாமல் என் அறைக்குள் வந்து என்னோடு உறவாடினாய், துவக்கத்தில் நமது பேச்சு பொதுப்படையாகத்தான் இருந்தது. ஒரு கிழமைக்குள் நமது உரையாடல் இருபொருள்பட அமைந்தது. ஒவ்வொரு சொலலுக்கும் அகப்பொருள் ஒன்று இருப்பதை இருவருமே உணர்ந்தோம். இருவருக்கும் வெட்கம்தான்; வெட்கப்பட்டு என்ன செய்வது?

ஒவ்வொரு நாளும் நீ என்னிடம் விடைபெற்றுக்கொண்டு போகும் போது 'நாளைக்கு வரமாட்டேன்' என்றுதான் சொல்லிவிட்டுப் போவாய். ஆனால் அதிகாலையில்பாலைக் குடிக்க வரும் பூனையைப்போல் பதுங்கிப் பதுங்கி என் அறைக்கு வந்திருக்கிறாய். இதையெல்லாம், நான் குறிப்பிடுவது, ஒரு பெண் ஆசையை மறைக்க இப்படிப்பட்ட முறைகளைக் கையாளுவது தமிழ் மரபு என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான். உன்னுடைய துடிப்பான குணமும், துடுக்குத்தனமான பேச்சுந்தான் என்னை அடிக்கடி குலுங்க வைக்கிறது. நண்பர் சோழனிடம் இதையெல்லாம் சொன்னேன். அவர் குறிப்பறிவதில் வல்லவர். அவர் சொன்ன பதில் இதுதான்:

''எனக்கு இது முன்னமேயே புரிந்துவிட்டது. நீங்கள் இருவரும் என்னை ஒரு பாலமாக வைத்து நடக்கிறீர்கள். நான் கடைசிவரை உறுதியான பாலமாக இருப்பேன். இருவரும் தாராளமாக கைகோர்த்து நடக்கலாம்'' என்கிறார். என்னைவிட அவர்தான் உன்னை அடிக்கடி பார்ப்பவர். உன்னோடு அவர் பணிபுரிகிறார். உன்னுடைய மனோநிலையை அவர்தான் எனக்கு அளந்து காட்டுகிறார், அதைப் போலத்தான் என் நிலையையும் உன்னிடம் கூறி இருப்பார். நீ அவரை நம்பலாம், பொய் சொல்லமாட்டார் நமது சோழன்.

'ஒரு பெண், தாயாரை விட்டு நெடுந்தூரம் தள்ளி இருந்தால், அந்தப் பெண் கெட்டுப் போவாள்' என்று நீ என்னிடம் ஒருமுறை கூறினாய். அந்தத் தத்துவத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. தாயாருக்கு அருகிலிருக்கும் பெண்ணும் கட்டுவிடுவதுமுண்டு; தாயாரை இழந்த பெண் ஒழுக்கமாக இருப்பதும உண்டு. ஒரு பெண்ணின் ஒழுக்கத்திற்கு அவள் மனம்தான் கோட்டை.

நீ என்னுடைய இருதயத்தைத் திருடிக்கொண்டு 'கிளித் தட்டு' விளையாடுகிறாய் என்பதை நான் உணர்கிறேன். நான் மட்டும் சும்மா இருந்தேனா? உன்னைப் பற்றித் தெரிந்துகொள்ள உன்னுடைய ஊருக்குப் போனேன். நண்பர் சோழனும் என்னுடன் வந்தார், விபரமாக அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். உன்னுடை தோழி ஜூலியட்டுக்கு இப்போது எதையும் சொல்லாதே!

என்றும் உன்

''கென்னடி.''

• கென்னடி என்பது புனைப்பெயர்.



சுற்றுச்சூழலை முற்றும் உணர்ந்து அதன் நல்லது கெட்டதுபற்றி நுணிகி ஆராயு முன்னர் எதனையும் செய்யக்கூடாது; எதனையும் இகழவும் கூடாது.

(குறள்—691)


# காஞ்சி

நிறுவனர்: அண்ணுதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 15—9—68 இதழ் 8


# வேலைநிறுத்தம் வேண்டாம்!

வருகிற 19-ம் நாள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப்போவதாக, மத்திய அரசு ஊழியர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிருர்கள்.

சிலபல கோரிக்கைகளை முன்வைத்து தங்கள் அடையாள வேலை நிறுத்தத்துக்குக் காரணம் கூறி இருக்கிருர்கள், மத்திய அரசு ஊழியர்களின் பல கோரிக்கைகளில் மிகவும் முக்கியமானது என்று கருதப்படும் தேவை அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்தல் என்ற கோரிக்கையானது, நாட்டின் பொருளாதாரச் சூழலை எந்தத் திசையில் திருப்பிவிடும் என்பதை நாட்டின் எதிர்காலம்மீது அக்கறை கொண்டோர் அனைவரும் எண்ணிப்பார்க்கவே செய்வர்.

நாட்டின் உற்பத்திச் சுணக்கத்துக்கும், விலைவாசி ஏற்றத்துக்கும் இந்திய அரசின் சில பொருளாதார கொள்கைகளே காரணம் என்ற குற்றச்சாட்டு வெளிப்படையாகக் கூறப்படும் நாள் இது. தன் அரசு இயந்திரம் சிக்கலின்றிச் செயல்பட்டுக்கொண்டிருக்க தனது ஊழியர்களைக் குறைவற்றவர்களாக—திருப்தியுடையவர்களாக வைத்திருக்க வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க, பாராட்டத்தக்க ஒன்றுதான்! ஆனால் இந்தக் காரணத்துக்காக, ஆண்டுதோறும் ஊதியம் உயர்த்திக் கொடுப்பது என்பதும், அதன் எதிரொலியாக மாநில அரசு ஊழியர்களுக்கு, ஊதிய உயர்வு உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படுவதும், இவை இரண்டின் காரணமாகவும் தனியார்தொழிலகங்களில் பணியாற்றுவோரும், பொதுமக்களும் விலை உயர்வு என்பதன்பேரால் பாதிக்கப்படுவதும் ஒரு வாடிக்கையான வழக்கமாகவே மாறிவிட்டிருக்கிறது.

இதற்காக அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தரக்கூடாது என்பது அல்ல நம் கருத்து. இப்போது அரசு ஊழியர்களின் கோரிக்கையில் முக்கியமானதாகக் கருதப்படும் தேவைக்கேற்ப குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்தல் என்பதனை அரசு ஏற்ருல்—அதன் எதிரொலி எதுவரையில் வந்து எதிரொலிக்கும் என்று மத்திய அரசு ஊழியர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதுதான்!

இப்போதைய நடைமுறையை மாற்றி, இக்கோரிக்கையின்படி மத்திய அரசுச் செயல்பட வேண்டும் என்ருல், இன்னமும் சுமார் 200 கோடி ரூபாய் வருவாய் ஒரு ஆண்டுக்கு மட்டும் தேவை என்ற நிலை ஏற்படும் என்று அறிவிக்கப் பெறுகிறது. ஆண்டுக்கு இன்னும் 200 கோடி ரூபாய் திரட்ட வேண்டுமானுல் இந்த அளவுக்குப் புதிய வரிகளைப் போடவேண்டும். புதிய வரி விதிப்புக்களின் காரணமாக, உற்பத்தி நிலையங்களும், வாங்குவோரும் எந்த அளவுக்கு மேலும் பளு ஏற்றுத் தீரவேண்டி இருக்கும்?

இவ்விரு திறத்தாரின் பளுவும் கூடுகிறபோது விற்பனைப் பொருள் விலை உயர்வுக்கு ஆளாகிப் போகிறது. மறுபடியும் கூலி உயர்வு. மறுபடியும் வரி உயர்வு என்று வளைய வளைய வந்து கொண்டிருக்கத்தான் வேண்டி இருக்கும்.

மத்திய அரசு ஊழியர்களின் கோரிக்கையில் பெரும்பான்மையைப் பரிசீலிப்பதாகவும், சிலவற்றுக்குக் குழு அமைத்து முடிவுக்கு விடுவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிற நேரத்திலேயே, அடிப்படை ஊதியம் நிர்ணயிப்பதிலுள்ள சங்கடத்தைப் பற்றியும் அறிவிக்கப் பெற்றுள்ளது.

அரசு ஊழியர்கள் என்போர், சமூகத்தின் ஒரு பகுதியே தவிர, முழுச் சமுதாயமும் அல்ல! சமூகத்தின் ஒரு பகுதிக்குத் தரப்படும் பாதுகாப்பு என்பது, சமூகம் முழுவதையும் பங்கப்படுத்திவிடுவதாக இருக்கக் கூடாது.

விலைவாசி உயர்வு காரணமாகவே, அனைத்துக் கோரிக்கைகளும் எழுப்பப்படுகிறபோது — அதனைக் குறைக்கத்தக்க நடவடிக்கைகளுக்கு அரசு ஊழியர்களும் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் அது முழுச் சமூகத்துக்கும் உதவி புரிவதாக இருக்கும்!

நாட்டின் மொத்த நலனையும் எதிர்பார்த்து இந்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்று—அதன் மூலம் ஏற்படும் அனைத்து இழப்புக்களையும் தடுப்பதுதான் விவேகமான செயலாக இருக்கமுடியும்.

எந்த ஒரு வேலை நிறுத்தமாக இருந்தாலும், பொது மக்களின் ஆதரவு அதற்கு இல்லையாயின் பலனேதும் ஏற்படமுடியாது. அதுபோலவே பொதுமக்களைப் பாதிக்கச்செய்யும்படியாக ஒன்றைச் செய்துவிட்டு. அவர்களது நல்ல எண்ணத்தையும் பெற்றுவிட முடியாது.

எனவே, சமூக நன்மையைக் கருதியாவது மத்திய அரசுடன், அதன் ஊழியர் ஒத்துழைக்கவேண்டும் என்றே விரும்புகிருேம்.

# அண்ணனுக்கு அறுபது!

அன்புள்ள நண்பா!

நமது அண்ணனும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருமான அண்ணா அவர்களுக்கு இன்று 60-ம் அகவை தொடங்குப்பெறுகிறது.

தமிழக மெங்கணும் கோலாகலத்தோடு அண்ணனின் பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது. நாடு நகரம் பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர் எங்கணும் இந்நாளைத் தங்கள் தங்கள் குடும்ப விழா நாளாகக் கொண்டாடிக் களிக்கின்றனர்.

தமிழகத்தில் தமிழர்கள் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து நடக்கும் நிலைமையினைத் தோற்றுவித்தவர் அறிஞர் அண்ணா! அதற்காக அந்த மாமேதைக்கு விழாவெடுக்கிறோம்!

அரசியல் சூதாட்டத்தில் பகடைக்காயாகப் பயன்பட்ட தமிழகத்தை, சரியான பாங்கோடு நெறிப்படுத்தி விட்ட பான்மைகண்டு பூரித்த உள்ளத்தோடு விழா வெடுக்கிறோம்!

ஏழை, பணக்காரன் என்ற பாகுபாட்டைக் கெல்லி எறிந்து சமதர்ம சமுதாயத்தைச் சமைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு சீரிய முறையில் செயல்பட்டுவரும் செம்மை கண்டு சிந்தை மகிழ்ந்து விழாவெடுக்கிறோம்!

> "ஒரு இனத்தை அடிமைப்படுத்த
> வேண்டுமானால் முதலில் அந்த இனத்தின்
> மொழியை அழித்துவிடு"

என்று இத்தாலிய நாட்டு மேதை இப்பன்ஸ் கூறியது போல, தமிழினத்தை அழிக்க வீறுகொண்டு வந்த இந்தியை சட்டபூர்வமாக ஒழித்துக்காட்டி, தமிழினத்துக்குப் பாதுகாப்புத் தேடித்தந்த பாங்குக்காக விழா வெடுக்கிறோம்!

தமிழின் பேரைச் சொல்லி, தம் வயிற்றை நிரப்பிக் கொண்டுவந்த பலரும், தமிழையும் அதன் வளர்ச்சியையும் திசை திருப்பிவிட்ட இழிச்செயல் கண்டு இதயம் வெதும்பி, பாதுகாப்புக் கோட்டையாக நின்று எழுத்தால், பேச்சால் அழிவைத் தடுத்து வளர்ச்சிக்குப் புதுவேகம் காட்டிய சிறப்புகண்டு விழா வெடுக்கிறோம்!

தமிழரின் தலைமகன் என்பதற்காக — தமிழின் காவலன் என்பதற்காக—சமதர்மச் சமுதாயம் அமைப்போன் என்பதற்காக — இல்லாமை, ஏழ்மை, இடர்ப்பாட்டைக் களையும் கதிரவன் என்பதற்காக — ஒளி விளக்கு என்பதற்காக—உதயஞாயிறு என்பதற்காக—அறிஞர் என்பதற்காக—டாக்டர் என்பதற்காக—எல்லாவற்றுக்கும் மேலாக நம் அண்ணன் என்பதற்காக இன, மத, வேறுபாடு ஏதுமின்றி விழா எடுத்துக் களிக்கின்றோம்.

விழாவெடுத்து மகிழ்கின்றோம்! விழா கண்டு மகிழ்கின்றார் அண்ணா! இதன் காரணங்களை மனதுள் எண்ணி பெரும் பெரும் பொறுப்புக்களுக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்கிறார்கள். விழாவெடுத்துச் சிறப்புச் செய்வதன் மூலமாக, நாம் மகிழ்ச்சி கொள்வதோடு மட்டுமே நின்றுவிடவில்லை. அண்ணன் அவர்களுக்குப் பொறுப்புக்களையும் மிகுதிப்படுத்துகிறோம் என்பதையும் எண்ணிக்கொள்ளவேண்டும்!

பொறுப்புக்களின் சுமை கண்டு நெளிபவரோ நம் அண்ணன்! அண்ணனைப் பற்றி அப்படியொரு கற்பனை செய்வதுகூட நன்றி கொல்லும் செயலாகிப்போகும்! அண்ணன் அப்படிப்பட்டவராக இருந்திருந்தால், இன்றைக்கு நாடு நகரெங்கும் விழா மகிழ்ச்சியிலா திளைத்திருக்கும்?

பொறுப்புக்களின் இன்பச் சுமை ஒன்றுதான் நம் அண்ணனின் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்பும். என்றாலும்—

> பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின்

என்பது வள்ளுவம் அல்லவா! மயில்தோகை பஞ்சினும் மென்மையுடையது. அந்த மயில்தோகையினையும் ஒரு அளவைக் கடந்து வண்டியிலேற்றி விட்டால், வண்டியின் அச்சு முறிந்துபோகுமாம்! வள்ளுவர் சொல்கிறார். நமக்காகவே சொல்லி இருக்கிறார் போலும்!

இக்கிழமை பத்தாம் நாள் நம் அண்ணன் அவர்கள் உடல்நலம் குன்றி மருத்துவத்துக்காக அமெரிக்கா சென்றிருக்கிறார்கள். செல்லுமுன் மருத்துவமனையில் இருந்தபடியே—

> "கோஷ்டிப் பூசல்களைத் துறந்து கட்சியின் ஒற்றுமையைப் பேணிக் காக்க வேண்டும்."

என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். அண்ணன் அவர்கள் உள்ளத்தை நாம் எந்த அளவுக்கு அலைக்கழித்து விட்டிருக்கிறோம் என்பதற்கு இதைவிட சரியான ஒரு எடுத்துக்காட்டை, எடுத்துக்காட்ட முடியாது!

(14-ம் பக்கம் பார்க்க)

# ஒளி உண்டு; சூடு இல்லை!

"எஸ். ஆர்"

ஆங்கிலத்தில் உள்ள ஸ்டேட்ஸ் மென்ஷிப்—டிப்ளமசி (Statesmanship - Diplmc) என்ற சொற்களுக்கு உள்ள வேறுபாடு புரியாதவர்களுக்கு 'வீரம்' என்ற குணத்துக்கு இருக்கவேண்டிய இலக்கணம் கூட தெரிந்திருக்க நியாயமில்லை.

போர்க்களத்தில் இருக்கவேண்டிய 'வீரம்' அரசியலில் உதவாது; அரசியலில் கடைபிடிக்கும் 'வீரம்' போர்க்கள விதி முறைகளுக்கு முரணானதாக இருக்கும்.

போர் முறையிலேயே கூட "நூற்றுக்கு நூறு வீரம்" என்ற பண்டைய முறை இப்போது பரிகசிப்புக்குத்தான் ஆளாகும். தந்திரம்-நிலைமைக்கேற்றாற்போல் போகும் போக்கு இன்றைய போர் நடவடிக்கைகளில் அனுசரிக்கப்படுகிறது.

பெரிய அடுப்பு; அது நிறைய செந்தணல். எரிந்த விறகுகள் நெருப்புக் கட்டிகளாக மாறிக் கிடக்கின்றன. அதனின்றும் என்ன பிறக்கும்? 'சூடு'தான் கிடைக்கும்.

சிறு அகல் விளக்கு; நாக்கு போன்ற ஜ்வாலை. சூடு கிடையாது; ஆனால் ஒளியை உமிழ்கிறது.

நெருப்பின் சூடு அகல் விளக்கில் கிடைக்காது.

அகல் விளக்கின் ஒளிப் பயன் நெருப்பில் வராது.

தமிழகத்தில் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடன் அண்ணாவின் தலைமை எரி நெருப்பாக இருக்கும் என்று நம்பினர்; எதிர்பார்த்தனர்: பயந்தனர்!

ஆனால் அது அகல்விளக்காக இருந்து நின்று எரிந்து நெடும் பயன் கொடுப்பதாக இருக்கிறது.

ஒளி உண்டு; சூடு இல்லை என்ற இந்த நிலையில் உள்ள அமைதித் தன்மை—ஆக்க பூர்வம் பலருக்குப் புரியவில்லை.

மற்றவர்களைப் போலவே உற்றவர்களில்கூட ஒரு சிலர்—

"என்ன இந்த அமைதிப் போக்கு?" என்று கேட்கின்றனர்.

உற்றவர்—மற்றவர் இருவருக்கும் அப்பால் உள்ள மாற்றார்களோ "என்ன இருந்தாலும் துணிவு போதாது" எனத் 'தூண்டிவிடும்' தந்திரத்துடன் பேசுகின்றனர்.

"இன்று முதல் தமிழ்நாடு தனித்தியங்கும் என்ற தீர்மானத்தை ஒருமனதாக பெருத்த வாக்குகள் வித்தியாசத்தில் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி சரித்திரத்தில் நீங்கா இடம்பெற்று விட முடியும்; அது ஒரு கடினமான காரியம் அல்ல."

என்று முதல் நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசிய அண்ணா அவர்கள் தான் எப்படி அரசியல் சட்டத்துக்குள் நின்று இந்த மாநிலத்தின் அதிக அதிகாரங்கட்கும் தமிழகத்தின் — தென்னகத்தின் மொழி — கலாச்சார உறவு முறைகளுக்கும் உயர்வுகளுக்கும் பாடுபட விழைய முடியும் என விளக்கிப் பேசியது ஒவ்வொருவரும் கூர்ந்து கவனித்து சிந்திக்கத்தக்க வரிகளாகும்.

'பிரிவினைவாதி' என்ற அறிமுகத்துடன் ஆரம்பமான அவரது மாநிலங்கள் அவை நுழைவு எப்படி அங்கே இருந்தவர்களை பின்னால் ஆட்கொள்ளும் அளவுக்கு இருந்ததோ அதனைப்போலவே—

"தமிழகத்தில் கழக ஆட்சியால் இந்தியா என்ன ஆகுமோ?" என்று அஞ்சிய அரசியல்—அரசியல் சார்பில்லாத வட்டாரங்கள் இந்தியாவுக்கு எடுத்துக்காட்டான நிர்வாகம் இங்கு நடைபெறுவதனை மட்டுமல்ல 'இந்தியா ஏதும் ஆகிவிடாமலிருக்க' இவர் கூறும் பாதையில்தான் செல்லவேண்டுமென்ற நிலை வளர்ந்திருக்கிறது.

- ஆட்சி ஒருபுறம்; மத்திய ஆட்சியை எதிர்த்த போராட்டம் மற்றொருபுறம் — என்பது அண்ணாவின் திட்டமல்ல.
- புதுடில்லி மண்ணில் மாநில அமைச்சர்கள் கைது என்ற நிலை — அண்ணாவினால் உருவாகவில்லை.
- பிரதமர் எனது மாநிலத்துக்கு வரட்டும் கைதுசெய்து காட்டுகிறேன் — என முழங்கியவர் அண்ணா அல்ல.
- கட்சித் தொண்டர்கள் இந்தியத் தலைநகருக்கு அனுப்பினார்கள் என சொல்லியவர் கிடையாது அண்ணா
- மத்திய அரசுடன போர் போர் எனப் பொதுமன்றத்தில் மார் தட்டிப பேசியதாக அண்ணாவைப் பற்றிய செய்தி நினைத்தும் பார்க்க முடியாத ஒன்று.

இப்படி எத்தனையோ! இருந்தும்

- 'தமிழ்நாடு' பிறந்திருக்கிறது.
- 'இருமொழித்திட்டம்' அமுலாகிறது.
- 'தாய்மொழி' அரசு மொழியாகியுள்ளது.
- மதுவிலக்கு தளரவில்லை.
- படி அரிசி குறைவில்லை.
- மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கோரிக்கை கவர்னர் உரையிலேயே இடம் பெறுகிறது.

காங்கிரஸ் ஆண்டபோது இல்லாத 'ஒளி' இவையெல்லாம். எதிர்க்கட்சி ஆளும் மற்ற மாநிலங்களுக்கும் கிடைக்காத இந்த 'ஒளி' தமிழகத்தில் மட்டுமே பிரகாசிக்கிறது.

அரசியலில் 'சூட்'டினைக் கலக்காமல் 'ஒளி' பிறக்கவைக்கலாம் என்ற அண்ணாவின் 'வீர'த்துக்கு எடுத்துக் காட்டு இவை.

ஈரமுள்ள வீரம்; விவேகமுள்ள வீரம்: இந்த 'ஒளி' பிறக்கக் காரணமாக இருக்கிறது.

ஆனால் அனைத்திந்தியத் தலைவராக இருந்த காமராசரும் சொல்லியிருக்கிறார் பலதடவை "என்ன இருந்தாலும் அண்ணாதுரைக்குத் துணிவு வேண்டும் என்று!"

இப்போதுதான் புரிகிறது அவர் விரும்புவது 'சூடு'தான் — 'ஒளி' அல்ல என்பது. ஏனெனில் அது அரசியலில் அவர் கண்டுபிடிக்கும் சூழ்ச்சி!

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்" என்ற நெறி அண்ணா கடைப்பிடிப்பது.

எனவேதான் அவரது ஆட்சியில் மற்றவரும் மாற்றாரும் எதிர்பார்த்த—எதிர்பார்க்கும் சூடு இல்லை, ஒளி மட்டுமே இருக்கிறது.

சூடு இல்லையே என கேட்கும் மாற்றாரின் சூட்சுமத்தைப் பார்க்கும்போது அவ்வைப் பாட்டி—ஆட்டுக்கார சிறுவன் கதைதான் நினைவுக்கு வருகிறது.

சுடாத பழம் கேட்டுவிட்டு ஊதித் தின்றதால் ஆட்டுக்கார சிறுவனின் சொல் சாதுரியத்தின் முன் தோற்ற அவ்வையின் நிலை பரிதாபகரமானது தானே!

அண்ணாவின் நிர்வாகத்தில் 'சூடு' இல்லை என்போர் மறைமுகமாக—தனியாக—தலைமறைவில் மேற்கண்ட சாதனைகளின் "அரசியல் சூடு" பொறுக்கமாட்டாமல் நெஞ்சம் பதறுவது நமது மனக்கண்களுக்குத் தெரியாமலில்லை.

# சிறுகதைச் செல்வர் செக்காவ்

"செக்காவின் நாடகங்களைப் பார்க்கும்பொழுது எனது நாடகங்களையெல்லாம் அடுப்பில்போட்டு விடலாமா...எனத் தோன்றுகிறது" என்று நாடக மேதை பெர்னர்ட்ஷா செக்காவின் நாடகங்களைப் பாராட்டிக் கூறியுள்ளார். ஷா, எவரையும் எளிதில் புகழ்ந்துவிடமாட்டார். புகழ்பெற்ற பலரை தமது நையாண்டிப் பேச்சால் தூக்கியெறிந்தவர். அப்படிப்பட்டவரே, செக்காவின் நாடகப் புலமையைப் பாராட்டியிருக்கிறார் என்றால்...செக்காவின் திறமை எப்படிப்பட்டதாகவிருக்கும்...? சிறந்த நாடகாசிரியராக மட்டுமில்லை சிறந்த சிறுகதை மன்னராகவும், சோவியத் ருஷ்யாவின் இலக்கிய வானில்...ஒரு விடிவெள்ளியாகவும் விளங்கினார் ஆண்டன் பாவ்லோவிச் செக்காவ் (Anton Pavlovich Chekov.)

ருஷ்யாவின் தென் பகுதியிலுள்ள டாகன்ரக் (Taganrog) என்ற நகரத்தில், சிறுகடை ஒன்றை வைத்துக் கொண்டு வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்த ஒருவரது குடும்பத்தில். 1860–ஆம் ஆண்டு செக்காவ் பிறந்தார். சிறுவயதிலேயே படிப்பின் மீது இவருக்கிருந்த ஆவலைக்கண்டு பெற்றோர்கள் படிக்கவைத்தனர். எத்தனையோ இடையூறுகளுக்குப் பின் மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் 1884–ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் பெற்றார். டாக்டர் படிப்பிற்குப் போதுமான பணம் தேவைப் படவே, பத்திரிகைகளுக்கு கேலிச் சித்திரங்களையும், கதைகளையும் எழுதி அனுப்பி ஓரளவிற்குப் பணம் சம்பாதித்துக் கல்வி கற்றார். இதிலிருந்துதான் இவரது இலக்கியப் பணி தொடங்கியது. டாக்டர் பட்டம் பெற்ற பின்பும் மருத்துவப் பணி புரியாமல், இலக்கியப் பணியிலேயே ஆழ்ந்திருந்தார். மனிதர்களின் நோய்களைப் போக்க வேண்டிய டாக்டர் செக்காவ், ருஷ்ய இலக்கியத்தில் ஏற்பட்டிருந்த நோயைப் போக்கவே தன் வாழ்நாளையெல்லாம் செலவிட்டார். 1886–ல் செக்காவின் முதல் சிறுகதை தொகுப்பு நூல் வெளிவந்தது. இதன் மூலம் மக்கள் மனதில் இடம் பெற்றுவிட்டார் செக்காவ். 1892—93 ஆண்டுகளில் நிஸ்னி நோவகிராடில் (Nijni Novogrod) காலரா நோய் பலமாகப் பரவவே, செக்காவ் உடனே அங்கு சென்று இலவசமாக மருத்துவத் தொண்டாற்றத் தொடங்கினார். அப்போது செக்காவ் பணப் பற்றாக்குறையினால் வாடினார். டாக்டர் பட்டம் பெற்றும் மருத்துவத் துறையில் அவர் சம்பாதித்ததேயில்லை. எழுதினால்தான் பணம்; எழுதுவதற்கோ நேரமில்லை. முழுநேரமும் நோயாளிகளைக்கவனிக்கவே சரியாக இருந்தது. இந்நிலையில் செக்காவின் தொண்டைப் பாராட்டி அரசாங்கத்தினர் வெகுமதி அளிக்க முன் வந்தார்கள். ஆனால், அவர் அதைப் பெற மறுத்துவிட்டார். கைதிகளின் நிலைமைகளை நேரில் கண்டறிய சைபீரியா வரை சென்று வந்த பிரயாணத்தாலும், கடும் உழைப்பாலும் 1897-ல் செக்காவை க்ஷய ரோகம் பற்றியது. நோய் குணமாக மலைப் பிரதேசங்களில் வாழ்ந்தார் 1901—ஆம் ஆண்டில். ஓல்கா நிப்பர் (Olga-Knipper) என்ற நடிகையைத் திருமணம் செய்துக் கொண்டார், திருமணமான மூன்று ஆண்டுகளுக்குள் செக்காவ் கடுமையான க்ஷயரோகத்திற்கு ஆளானார். 1901—ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டாம் நாள், இலக்கிய உலகிற்கு அரிய பல சிறுகதைகளையும், நாடகங்களையும் படைத்துக் கொடுத்த இலக்கிய மேதை செக்காவ் இயற்கை எய்தினார்

பிரெஞ்சு சிறுகதை இலக்கியத்திற்கு மாப்பசான் எவ்வளவு பெருமையைத்தேடித்தந்தாரோ... அதேபோல் செக்காவும், சோவியத் சிறுகதை இலக்கியத்திற்கு தனிச்சிறப்பைப் பெற்றுத்தந்தார். இலக்கியத்துறையில் புதுப்புது உத்திகளைக் கையாண்டு வெற்றிபெற்று தனக்குப் பின் ஒரு புதிய பரம்பரையையே, உண்டாக்கிவிட்டார். செக்காவின் பாணியில் பலர் எழுதத் துவங்கினார்கள். அவர்களில் கார்க்கி, குப்ரீன், புனின் போன்ற முக்கியமான சிலராவர். ஒரு சிறுகதைக்கு முழுரூபம் கொடுத்து எழுதுவதை செக்காவ் வெறுத்தார். எதற்கும் ஆரம்பம முடிவு இல்லை என்பது அவரது கருத்தாகும். எனவேதான் அவர், சிறுகதை எழுதத் துவங்கிய தம் நண்பர் ஒருவருக்கு, "ஒரு சிறுகதை எழுதி முடித்ததும் அதன் ஆரம்பம் முடிவு இரண்டையும் அழித்து விடு. அதுதான் சிறுகதையின் இலக்கணமாகும்" என்று அறிவுரை புகன்றார்.

செக்காவின் நாடகங்களில், அன்றாடம் நாம் காணும் பலதரப்பட்ட மனிதர்களைக் காணலாம். உணர்ச்சியும், உயிர்த்துடிப்பும் மிக்கப் பாத்திரங்களை செக்காவ் உருவாக்கினார். மனித மனத்தின் நிறைவேறாத ஆசைகள், ஏக்கம்–உள்ளக் குமுறல்கள், உணர்ச்சிக் குமிழிகள் ஆகியவைகளை இவரது எழுத்தில் காணலாம். செக்காவின் நாடகங்களைக் காண்போர், தம்மை மறந்து நாடகப் பாத்திரங்களோடு ஒன்றி விடுவார்கள். பாத்திரங்கள் அழும்போது இவர்களும் அழுவார்கள்; அவர்கள் சிரிக்கும்போது இவர்களும் சிரிப்பார்கள். நாடகம் முடிந்தபிறகும்கூட வீடு செல்ல வேண்டும் என்ற நினைவே இல்லாமல் பிரமையுடன் உட்கார்ந்திருப்பார்கள். அறிவிப்பாளர், "நாடகம் முடிந்துவிட்டது" என்று கூறிய பிறகுதான் பிரமை நீங்கியவர்களாக எழுந்து நாடக அரங்கை விட்டுச் செல்வார்களாம்! 1896–ஆம் ஆண்டில் செக்காவின் முதல் நாடகமான "கடல் பறவை" (Sea Gull) நடத்தப்பட்டபோது நடிகர்களின் திறமையின்மையினால் படுதோல்வி அடைந்தது. மீண்டும் இதே நாடகம் பயிற்சிபெற்ற தகுந்த நடிகர்களைக்கொண்டு போதிய கவனத்துடன் 1898–ல் நடத்தப்பட்டது. இம்முறை நாடகம் மாபெரும் வெற்றியை அடைந்தது. இந்த வெற்றி செக்காவுக்கு மிகுந்த ஊக்கத்தைக் கொடுத்தது. நாடகங்கள் எழுதத் துவங்கினார். 'அங்கிள் வான்யா' (The Uuclevany) 'மூன்று சகோதரிகள்' (The Three Sister) 'செர்ரீ ஆர்ச்சர்டு' (Cherr Orchard) போன்ற செக்காவின் நாடகங்கள் ருஷ்ய இலக்கிய மாளிகையின் கோபுரங்களில் வைரக்கற்களாக பதிந்துநின்று என்றும் மங்காத ஒளியை வீசிக்கொண்டிருக்கின்றன!

—கி. வீரமணி

# என். சி. சி.யும் இந்தி ஆணைச் சொற்களும்

இந்தியப் பேரரசின் அரசியலமைப்பில் எல்லா மாநில மக்களுக்கும், எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து (Equal Status) அளிக்கும் வகையில் பேரறிஞர் அண்ணாவின் தலைமையிலுள்ள தமிழக அரசு போராடி வருகிறது. மும்மொழித் திட்டம் என்ற பெயரால் இந்தி பேசாத மாநிலங்கள் இந்தியைத் திணித்து இந்தி மாநிலங்கள் தென் மொழிகளை ஏற்காமல் புறக்கணித்து நடத்தும் ஏமாற்று நாடகத்தை அம்பலப்படுத்த தமிழக அரசு இந்தியை விரட்டி இருமொழித் திட்டத்தை அறிவித்தது. அதன் தொடர்பாக மாணவர்களிடத்தில் என். சி. சி. என்ற பெயரால் இந்தியைத் திணித்து நடத்திவந்த ஏற்பாட்டை ரத்துச் செய்து, வரலாற்றுச் சிறப்பைப் பெற்றது. இது பொறுக்காத மத்தியப் பேரரசு என். சி. சி.-யில் பத்து ஆணைச் சொற்களே உள்ளன; அது இருந்தாலென்ன என்று சொல்லி ஏமாற்றி இந்தியா என்றால் இந்திதான் எல்லாம் என்ற முறையில் ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறது. என். சி. சி. படைப் பிரிவின் தலைவர் கிருஷ்ணா அவர்களும் இந்தி ஆதிக்கத்தின் ஏவலராய் நடந்து அதற்காகப் பரிந்து பேசுகிறார். ஆனால் உண்மை என்ன? இந்தி ஆணைச் சொற்கள் பத்து மட்டுமா? அல்ல. இதோ எத்தனை என்பதற்கு எடுத்துக் காட்டு.

| ஆங்கில ஆணைச் சொற்கள் | இந்தி ஆணைச் சொற்கள் |
|---|---|
| Attention | சாவ்தான் |
| Stand at ease | வி ஸ்ராம் |
| Stand easy | ஆராம் ஸே |
| Eyes right | தைனே தேக் |
| Eyes left | பைனே தேக் |
| Right dress | தைனே சச் |
| Eyes front | சாம்னே தேக் |
| Right turn | தைனே மூட் |
| Left turn | பைனே மூட் |
| About turn | பீச்சே மூட் |
| Half right turn | ஆதா தைனே மூட் |
| Half left turn | ஆதா பைனே மூட் |
| On parade | பெரேட் பர் |
| Slow march | தீரே சல் |
| Halt | தம் |
| Mark time | கதம் தால் |
| Will advance | ஆகே படேகா |
| Will retire | லவுட் டேகா |
| Right wheel | தைனே கும் |
| Left wheel | பைனே கும் |
| As you where | சை ஸே தே |
| Open order march | குலி லைன் சல் |
| Close order march | நிக்த லைன் சல் |
| By the left quick march | பைனே ஸே தேஸ் சல் |
| By the right quick march | தைனே ஸே தேஸ் சல் |
| By the centre quick march | மத்தி ஸே தேஸ் சல் |
| From the right number | தைனே ஸே கின்தி கர் |
| Ground arm | பூமி சா ஸ்த்ரா |
| Shoulder arm | பகல் சா ஸ்த்ரா |
| Front line steady | அஃலி லைன் கிலோமத் |
| Centre line steady | மத்தி லைன் கிலோமத் |
| Rear line steady | பீச்சே லைன் கிலோமத் |
| More to the right | தைனே சலேகா |
| Saluting the front | சாம்னே சலாமி |
| To the front salute | சாம்னே சலியூட் |
| General salute | ஜெனரல் சலாமி |

இத்தனை இந்தி ஆணைச் சொற்களைப் புகுத்தி விட்டு சொல்கிறது டில்லி அரசு பத்து சொற்கள்தான் என்று! இதிலும் கூட ஆபீசர், பெரேடு, சலியூட், லைட், ஜெனரல் என்பனவற்றுக்கு இந்தி சொல்லுக்குப் பஞ்சம் போலும். இவற்றை இந்தியோடு கலந்து இந்தி ஆணைச் சொல் வரிசையில் சேர்த்திருக்கிறது அந்த அளவுக்கு இந்தி மொழி ஆசை. தெரியாவிட்டாலும்கூட!! ஆசை வெட்கமறியாதல்லவா! அதனால்.

இதற்குப்பெயர் தேசியஒருமைப்பாடாம். இந்தியைத் திணிப்பதுதான் ஒருமைப்பாடா? அல்ல." அடிமைப் பாடு! ஏன் இந்தியா பூராவும் என். சி. சி.யில் தமிழ் ஆணைச் சொற்களை வைக்கலாமா? ஏற்றுக் கொள்வார்களா? பெரும்பான்மை இல்லையென்றால் தமிழ் நாட்டில் மட்டும் இந்தி என்ன பெரும்பான்மை மொழியா? பெரும்பான்மையோ, சிறுபான்மையோ தலைக்கு ஒருவன் படிக்கவேண்டுமல்லவா? தமிழை ஏற்கட்டுமே! முடியாதென்றால் இங்கு மட்டும் மும்மொழி என்ற ஏமாற்றுத் திட்டத்தின்பேரால் இந்தி ஆதிக்கமா? சரியா?

காலையில் ரேடியோவைத் திருகினால் கொழும்பு இலங்கை வானொலிகூட ஆவணி மாதம் இருபதாம் தேதி என்று சொல்கிறதே. தமிழ் நாட்டிலுள்ள திருச்சி வானொலி நிலயத்தில் சக வருஷம் பாத்ர மாதம் என்கிறார்களே! இதைவிட அடிமைத்தனத்திற்குவேறு என்ன ருசு வேண்டும்!

—கே. சி. ராமசாமி

★

மாண்புமிகு அமைச்சர்
மா. முத்துசாமி
அவர்களது
இரஷ்யப் பயணம்
பற்றிய தொடர் கட்டுரை
விரைவில் காஞ்சியில் வெளியாகிறது.

# நினைவுகள் வாழ்கின்றன...

ஜே. வி. நாதன்.



கன்னங்கரிய இருள் கணைகளுக்குத் திரை போட்டிருக்க கனத்துக் கருத்திருந்த மேகத்திரள் கண் சிமிட்டி வெட்டத் தொடங்கியது. இன்னும் சற்று நேரத்தில் மழை கொட்டப் போகிறது.

காரைக்குடி தாண்டி விட்டது. 'ஜிகு......ஜீகு, குபு ...குபு...' என்று ஒரே லயத்தில் தாளம் போட்டுக்கொண்டு விரைவாக ஓடியது அந்த விரைவுப் புகை வண்டி. இன்னும் இரண்டுமணி நேரம்தான்—ஊர் வந்துவிடும்!

படீரென்று வெடித்தது வானம். அண்டமே விண்டதுபோலப் பேரொலி. என் மனத்தில் ஏதேதோ உணர்வுகள் பேயாட்டம் ஆடின. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு என் ஜீவசக்தியைத் தேடிச் செல்கிறேன். .........இன்னும் அவள் எனக்காகக் காத்திருப்பாளா? வெளியே வானம் குமுறியது. 'சோ'வென்று பேய் மழை! கண்ணாடி சன்னலை இழுத்து விட்டு அதன் வழியே பளீரென்று வானத்தில் கோடிழுக்கும் ஒளிச் சுவாலையை வேடிக்கைப் பார்க்கிறேன். என் இதயத்திலேயும் பளிச்சென ஒரு மின்னல்!

"ஓ, சேகர்!........உங்களுக்காகக் காத்திருக்கிறேன்! இன்னும் நான் காத்திருக்கிறேன்!......"

ஒரு மங்கையின் குரல் திரும்பத் திரும்ப ஒலித்து, என்னைத் 'துரோகி துரோகி' என்று குத்திக்காட்டி வேதனை செய்கிறது. உடல்—உள்ளம் யாவும் நடுங்குகின்றன.

இதயத்தைப் பிடித்துக்கொண்டு "ஜெயா! ஜெயா!" என்று வீறிட்டேன்.

* * *

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு..... அந்த மனோகரமான நாட்கள்...!

இளமைப் பருவம் இன்பமயமானது. சிறுவயதில் நானும் அவளும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுவோம். நான் கண் பொத்திவிடுவேன். ஜெயாவும், அவள் தோழிகளும் ஒளிந்துகொள்வார்கள். ஜெயா என் கைகளால் கண் பொத்திக் கொள்வதற்காக அடிக்கடி 'அவுட்' ஆவாள். வைகைத் தாயின் மடியில் பால்நிலவின் பட்டொளியில் நானும் அவளும் கைகோத்துத் திளைத்த அந்த நாட்கள்!......

மாந்தோப்பில் இருவரும் சந்திப்போம். எனக்காக இனிப்புப் பலகாரங்களை ஜெயா கொண்டு வருவாள். மாந்தோப்பில் குயில்கள் கீதம் பாடும். என் மடியில் தலை புதைத்து ஜெயா மனத் தந்திகளாலேயே வீணை மீட்டி நாதமிசைப்பாள். ஒருவரை ஒருவர் விழுங்கத் துடிப்பதுபோல் வெகுநேரம் கண்களால் உறவாடுவோம். ஆகா! அந்த வாய் பேசா மௌனப் பொழுதுகளின் இன்பம்தான் எத்தனைக் கோடி!

இவையெல்லாம் என் வாழ்வின் கடந்த கால இன்ப நினைவுகள். திரும்பி வராத—நினைக்க மட்டுமே முடிந்த இன்பப் பொழுதுகள்!

அந்தக் கடைசி நாள்...

மாமரத்துக் கிளை ஒன்று வளைந்து ஆற்று நீரை முத்தமிட்டது. ஜெயா தேம்பித் தேம்பி அழுதாள். என் மார்பில் சாய்ந்து கண்ணீர் பெருக்கி, "சேகர்! நீங்கள் சென்னைக்குப் போய்த்தான் வேலை தேட வேண்டுமா? ...... இங்கேயே பார்க்கக் கூடாதா?" என்று அவள் கவலையோடு கேட்டாள்.

"சே, அசடு போலப் பேசுகிறாயே! இந்தக் குக்கிராமத்தில் எனக்கு என்ன வேலை கிடைக்கும்? சென்னைக்குச் சென்று ஒரு நல்ல வேலை கிடைத்ததும் உன்னைத் தேடிவந்து உன் பெற்றோரிடம் சொல்லி மணம் செய்து அழைத்துச் செல்கிறேன். கவலைப்படாதே. என்னை நம்பு ஜெயா, நம்பு!" என்று கண்ணீரைத் துடைத்துக் கூறினேன்.

பிரிவை அவளால் தாங்க முடியவில்லை. என் சட்டைப் பையிலிருந்து மிட்டாயை எடுத்துக் கொடுத்தேன். என்ன நினைத்தாளோ, "சேகர்!" என்று என் காலில் விழுந்து கதறிவிட்டாள். எனக்கும் கண்ணில் நீர் பெருகியது, 'ஜெயா' என்று அவளை வாரித் தூக்கினேன்.

சலசலத்து ஓடிய ஆற்றில் காகிதக் கப்பல் செய்துவிட்டேன். அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவள் திடீரெனப் பேசினாள்: "சேகர்! நீங்கள் என்றைக்குத் திரும்பினாலும் சரி, அதுவரையில் உங்களுக்காக நான் நிச்சயம் காத்திருப்பேன். கப்பல் கடற்கரையில் வந்து தங்குகிறது; போகிறது. ஆனால் கப்பல் சென்றுவிட்டதே என்று கரை வருந்துவதில்லை. வருந்தினாலும் மீண்டும் கப்பல் 'என்றாவது தன்னிடத்தில் வரும். அப்பொழுது நாம் ஆதரவு தந்து அன்பு செலுத்தலாம்' என்ற நினைவில் காத்து நிற்கிறது. கப்பலின் இயல்பு ஒரே இடத்தில் தங்க முடியாதுதான்! கரையின் இயல்போ காத்து நிற்பதுதான்! நீங்கள் என்னை விட்டுச் சென்றுவிட்டீர்கள் என்று நான் வருந்தப்போவதில்லை. என்றேனும் நீங்கள் வருவீர்கள் என்ற நம்பிக்கையில் இந்த உயிர் காத்து நிற்கும் கரை காத்து நிற்பதைப் போல!" என்று அழுத்தந் திருத்தமாகப் பேசினாள் ஜெயா.

நான் காகிதத்தில் செய்துவிட்ட கப்பலைப் பார்த்துக்கொண்டு நின்றேன். சற்றுதூரம் சென்றதும் கப்பல் மூழ்கியது. அப்போது அவள் முகத்தில் தோன்றிய பீதி?

உயிரை உடல் பிரிவதுபோல வேதனைப் பெருமூச்சுடன் இருவரும் பிரிந்தோம். கண்ணீரினூடே அழ

ளாகக் கையசைத்து எனக்கு அவள் விடை தந்தாள்.

● ● ●

சென்னைக்குச் சென்றதும் வேலை முயற்சிகள் பலனளிக்கவில்லை. மனதில் ஜெயாவின் அழகு முகம் பளிச்சிட்டு அவளது அரவு நிறைந்த பேச்சுக்களும் அடிக்கடி மின்னலிட்டு என்னைச் சித்திரவதை செய்தன. பிரிய மனமின்றிப் பிரிந்தோமே அந்தக் கடைசி நாளைப் பற்றியும், அவள் கூறிய 'கரையைப்போலக் காத்து நிற்பேன்' என்ற தத்துவத்தைப் பற்றியும் நினைத்தபோது என் மன உணர்ச்சிகளை அப்படியே எழுத்தில் வடித்தேன். கடிதத்தை அவளுக்கு அனுப்பப் பயமாக இருந்தது. கடிதம் வேறு யாரிடமாவது சிக்கிவிட்டால்?

கடிதத்தில் வாலையும் தலையையும் —உள்ளே பெயரையும் மாற்றினேன். படித்துப் பார்த்தேன். சிறுகதை போல அழகாக அமைந்திருந்தது. "கடைசி நாள்!" என்றே தலைப்பிட்டு 'மல்லிகை' பத்திரிகைக்கு அனுப்பிவைத்தேன். கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை நான் என் குப்பையைப் பிரசுரித்துவிடுவார்கள் என்று' என் எழுத்தை அச்சில் அதுவும் ஒரு படத்துடன் பார்த்தபோது எங்கோ வானளவு நான் உயர்ந்து நிற்பதாய் ஒரு பிரமை! கதைக்குப் படம் போட்டிருந்தார்கள்—'நானும் அவளும் மாமரத்தினடியில் கண்ணீருடன் விடைபெறும் கடைசிக் காட்சி; பக்கத்தில் ஆறு சலசலத்து ஓடுகிறது. அதில் சிறு காகிதக் கப்பல்...' எனக்குப் பெருமை பிடிபடவில்லை. நான் எழுத்தாளன் ஆகிவிட்டேனா?

தொடர்ந்து எழுதினேன். அவளுடைய நினைவில் நான் துடிக்கின்ற போதெல்லாம் புதிது புதிதாக எழுதிக்குவித்தேன். எல்லாம் அவளைப்பற்றித்தான்! அவளுடன் பழகியது,பேசியது ஒவ்வொன்றிற்கும்புதுப் புது உருக் கொடுத்தேன்; அவளை ஒவ்வொரு விதமாகக் கற்பனை செய்தேன். எழுத்தில் வடித்தேன். எண்ணற்ற பாராட்டுக் கடிதங்கள்!...... தமிழ் வாசகர்கள் அன்பு வெள்ளத்தால் என்னைத் திணறடித்தார்கள்.

என் மனத்தின் மூலையில் ஒரு துடிப்பு. எனக்கு எழுத்தைக் கொடுத்தவளை, என் காவிய நாயகியை, என் எழுத்தின் ஜீவ சக்தியை ஒரே ஒருமுறை காண வேண்டும். அவள் கடைசியாகக் கூறினாளே, கரையைப்போலக் காத்து நிற்பேன்' என்று. அப்படி அவள் காத்திருக்கிறாளா?......என் புதை அறியவேண்டும்! எனக்குப் பயமாக வேறு இருந்தது. நினைவில் வாழும் அவளை நேரில் சந்திக்கும் போது அவள் வேறு விதமாக இருந்துவிட்டால்? என் கற்பனைகள்...கனவுகள் எல்லாம் தலைகீழாய் மாறிவிடுமே, அப்போது நான் என்ன செய்வேன்?



பரமக்குடி மனிதர் ஒருவரைத் தற்செயலாக எட்டு ஆண்களுக்குப் பின்னர் சந்தித்தபோது அவரிடம் ஜெயாவைப்பற்றி விசாரித்தேன். அவர் கூறிய பதில் அக்கினிக் குழம்பை முகத்தில் வீசியது போலிருந்தது.

"யாரு ஜெயா? ஓ, அந்தப் பொண்ணா? பள்ளிக்கூடம் நடத்தறேன்னு சொல்லிகிட்டு...யாரோ ஒரு பயலோட கள்ளக்காதல் நடத்திச்சு, ஊரே காரித் துப்பி...கண்றாவி இதெல்லாம் ஏனுங்க?.........அது ரொம்ப மோசமான பொண்ணுங்க. அதைப் பத்தியெல்லாம் நாம பேசறதே பாவம்......!!"

எனக்கு உலகமே இருண்டது.

என் காவிய நாயகியா அப்படி நடத்தைக்கெட்டுப்போனாள்? இருக்காது......இருக்காது......! நேரிலே கண்டுதான் ஐயத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

கிளம்பிவிட்டேன். எட்டு வருடங்களுக்கு முன் கரையைப்போலக் காத்து நிற்பேன் என்றுகூறியவளைத் தேடி சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் தடுக்கப்பட்டிருந்த நான் கிளம்பி விட்டேன். நேரில் இல்லாமலே... நினைவின் மூலமாக என்னைக் கற்பனைக் களஞ்சியமாக்கிய என் ஜீவ சக்தி ஜெயா நேரில் நான் நினைத்த படி மட்டும் இல்லையென்றால்......

புனிதம் நிறைந்த பாத்திரங்களுக்கு என் ஜெயாவை மனதில் நிறுத்தி அப்படியே உருக் கொடுக்கிறேன். இன்று அவள் தவறி விட்டாள்—நடத்தை கெட்டுவிட்டாள் என்ற செய்தி! உண்மையாக இருக்குமோ?

எட்டு வருடங்களாக இல்லாத அக்கறையுடன், துரோகம் செய்து விட்டாள் என்ற உண்மை தெரிந்த தால் ஏற்பட்ட எழுச்சியுடன் நான் அவளைத் தேடி இதோ புகைவண்டி யில் பயணம் செய்து கொண்டிருக் கிறேன்.

* * *

வண்டி மானமதுரையில்நின்றது. பேய்க்காற்றுடன் மழை சுழன் றடித்துக் கொண்டிருந்தது. எங்கோ ரெயில் பாதையில் கோளாறும். காலையில்தான் வண்டி கிளம்புமாம்! நிலையத்தில் இறங்கி இரவுச் சிற் றுண்டியை முடித்துக்கொண்டு மறு படியும் வண்டியில் என் ஆசனத் தில் அமர்ந்து கொண்டேன்.

எதிரில் அமர்ந்திருந்த பெரியவர் பேச்சுக் கொடுத்தார். ''தம்பி எது வரைக்கும்...?''

''பரமக்குடி'' என்றேன். அவரும் அந்த ஊர்க்காரர்தானும். 'ஏன் இவரை விசாரித்தால என்ன?' என்று தோன்றவே பொறுக்க முடி யாமல் கேட்டுவிட்டேன். அவர் தெளிவாக ஜெயாவைப் பற்றி விபர மெல்லாம் கூறினர்.

'கொட்டாபுளித்தெரு வாத்தி யாரு பெண் ஜெயாவைப் பத்தித் தானே தம்பி கேக்கறீங்க. அதைப் போலப் பெண்களைப் பார்க்கறதே அரிது தம்பி! கல்யாணமே செய்து கொள்ளாமல் தன்னுடை வாழ்க் கையை சேவைக்கு அர்ப்பணிச்சுக் கறது என்ன சாமானிய விஷயமா? தன் சொத்து முழுவதையும் பள்ளிக் கூடத்துக்கு எழுதி வைச்சுட்டு பள்ளியின் அநாதைப் பிள்ளைகளுக் காக இராப்பகலாய் உழைக்குது. ஊரிலே இருக்கிற பொருமைப் பிசா சுங்க ஏதேதோ வதந்திகளை அபாண்டமாக்கிளப்பிவிட்டுப் பார்த் தானுங்க. தூய அக்கினியாச்சே அது. அதில் அழுக்குப்பட்டால் நீருகி விடாதா? 'சேகர் சேவாசிரமம்' என்று பரமக்குடியில் இன்னிக்கு எவ்வளவோ அநாதைக் குழந்தை களுக்குப் புகலிடம் கொடுத்திருக்கற தைப் பார்த்தால் மழை பெய்வதே அந்தப் பொண்ணுக்காகத்தானே என்றுதான் நினைக்க வேண்டி யிருக்கு......''

'சேகர் சேவாசிரமமா?''—மென்று விழுங்கினேன்.

''ஆமாம தம்பி, சேகருங்கறது எந்தப் புண்யவானுடைய பெயரோ, அந்தப் பேரில்தான் அந்த உத்தமி தர்மகுணத்தோட சேவை செய்துக் கிட்டிருக்கிரு—அவள் நல்லாயிருக் கட்டும்!'' என்று முடித்தார் பெரி யவர்.

என் கண்ணில் நீர். என்னைப் புண்ணியவான் என்று பேசுகிருர் கள். பூவோடு சேர்ந்த நாரும் மணக்குமோ?.........என் பெயரில் ஆசிரமம நடத்துகிருளே! எனக்கா அவ்வளவு மதிப்பு? நான் கூசிக் குறுகி நிற்கிறேன். ''ஜெயா நீதான எவ்வளவு உயாந்த மனம் படைத் தவள்? என்னை மன்னித்துவிடு ஜெயா!''

ரயிலிலிருந்து இறங்கிவிடுகிறேன்.

''என்ன சார், இறங்கிட்டீங்க? இன்னும் அரைமணியிலே 'லயன் கிளியர்' ஆகிவிடும்......'' என்ருர் அந்தப் பெரியவர்.

''இல்லே...நான் அடுத்த ரயிலில் சென்னைக்கே திரும்பிப் போகவேண் டும்...'' என்று பதிலளிக்கிறேன்.

அவருக்கு என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. விழிக்கிருர். ஆனல் எனக்குப் புரிகிறது.......'கரைகாத்து நிற்பதைப்போல நிற்க வில்லை, துரோகம் செய்துவிட்டாள்' என்று யாரோ சொன்னதைக் கேட்டுத் தவருகப் புரிந்துகொண்டு இவ்வளவுதூரம் ஓடிவந்தேன். இப் போது நன்ருகத் தெரிந்துகொண் டேன் — அவள் என்றுமே என் காவிய நாயகியாக இருப்பதற்குத் தகுதியுள்ளவள்தான்? நான் அவள் நினைவு தரும் சக்தியில் இன்னும் எழுதிக் குவிக்கவேண்டும். அதை அவளைச் சந்திப்பதன் மூலம் குலைத் துக்கொள்ள விரும்பவில்லை.

அவளைத் துரோகி என்று நினைத் துச் சந்தேகித்து ஓடிவந்தேனே. அவளா துரோகி? இல்லை....இல்லை ...நான்தான் துரோகி!— ஆம், நான் ஒரு பச்சைத் துரோகியேதான்!

வேலை கிடைத்தவுடன் வந்து உன்னை ஏற்று அழைத்துச் செல் கிறேன் என்று கூறிவிட்டு வந்தவன் அவளை மறந்து, வேலை கொடுத்த மானேஜரின் மனம கோணக் கூடாதே என்று அவருடைய பெண்ணையே மணந்துகொண்டது நான் ஜெயாவுக்குச்செய்த பொறுக்க முடியாத துரோகம்தானே?

எட்டு வருடங்களாக அவள்முன் முகத்தைக் காட்ட வெட்கப்பட்டுக் கொண்டு நினைவிலுல மட்டும் அவளைச் சந்திக்கும் நான் நிச்சயம் ஒரு துரோகி மட்டுமல்ல; கோழை யும் கூட!

என் நெஞ்சில் அவள் வாழ்கிருள்! அவள் நினைவில் நான் வாழ் கிறேன்—என் எழுத்தும் வாழ்கிறது! மொத்தத்தில்—

நினைவுகள் வாழுகின்றன... அவை வாழட்டும்! ஆனல் — அவை மட் டும் வாழ்ந்தால் போதுமா?

## எந்நாளும் வாழ்த்து வரும்!

கற்பனைக் கெட்டாத கொற்றவனே!—உன்னைச்
சொற்களால் வாழ்த்திடவோ!—நான்
எத்தனை வார்த்தைகள் தேடிடினும் அதில்
ஏத்திட வார்த்தையில்லை!—புகழ்ச்
சேர்த்திடப் பஞ்சமில்லை!

கற்றவர் மற்றவர் எத்துறையாளரும்
இற்றுமைப் போற்றுகின்ருர்!—நாட்டில்
சிற்றறிவாளரும் சிந்தனை யால்மகிழ்
வுற்றுமைப பாடுகின்ருர்!—புகழ்ச்
சொற்களைத் தேடுகின்ருர்!

தொட்டிலில் தூங்கிடும் சிட்டெனும் சேயினம்
பட்டெனப் பாய்ந்துவரும்!—உம்மைக்
கட்டியணைத்துமென் முத்தங்கள் தந்துகைத்
தட்டிச் சிரித்துவிழும்—உம்மை
விட்டுப் பிரிய அழும்!

தெள்ளுத் தமிழ்உன்னில் அள்ளிக் குடித்திடும்
தேனெனச் சேர்ந்துவரும்!—தமிழ்ப்
பள்ளி இயங்கிட உந்தன அறிவினில்
பாங்குட னேசெழிக்கும்!—பலர்
ஏங்கிட வேசிறக்கும!

இன்னல்கள் நீங்கிட அண்ணாவின் ஆட்சியென்
றெண்ணிடும் ஓசைவரும்!—சுப...
கன்னலைப் போன்றநீர் பல்லாண்... வாழ்கவென்
றெந்நாளும் வாழ்த்துவரும்!—...திப்
பன்னலம் ஓங்கி வரும்!

—குடியேற்றம் இளவரசு.



# வேடனும் வெண்புறாவும்

எஸ்.எஸ். தென்னரசு.

## 8. வேடன் கையில் விழ்ந்தது வெண்புரு!

போர்க்களம், லைகர்கஸ் மன்னனின் படை அணி அணியாகச் சிதறத் தொடங்கியது. புரவிகள் வெருண்டு ஓடின. அவைகளைத் தொடர்ந்து லைகர்கஸ் அமர்ந்திருந்த குதிரையும் ஓடத் தொடங்கியது லைகர்கஸ் எவ்வளவோ அடக்கிப் பார்த்தான். இயலவில்லை. பயந்து ஓடும் குதிரையில் இருந்தால் ஏளனத்திற்கு இடமாகுமே என்று கருதி, ஓடும் குதிரையிலிருந்து அவன் குதித்து களத்திலே சண்டையிட்டான். ஆனால் அதுவே அவனுக்குத் தீவினையாக முடிந்துவிட்டது. மன்னனின் அலங்காரப் புரவி மன்னனில்லாமல் ஓடுவதைப் பார்த்த அவனது படையினர் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். மன்னன் மடிந்துவிட்டான் என நம்பி எல்லோரும் புறமுதுகிட்டு ஓடத் தலைப்பட்டார்கள். கெல்லாஸ் படை வெறிபிடித்துப் போர் புரிந்தது. கிளிஸ் தெனீஸ் களத்திலே கோர தாண்டவமாடினான். அவனுடைய வாள் வீச்சு வண்டிசை பாடியது. படைவீரர்கள் ஆனந்தத்தால் பாடினார்கள்.

"வெற்றி! வெற்றி! கெல்லாசுக்கு வெற்றி!"

"வெற்றி வெற்றி கிளிஸ்தெனீசுக்கு வெற்றி!" என்ற முழக்கத்துடன் கெல்லாஸ் படை நாடு திரும்பியது.

மறுநாள் வெற்றி விழா விருந்து. இரவெல்லாம் மன்னனுக்குத் தூக்கமில்லை. இளைய மகனை பெர்க்ளீசைப் பற்றியே எண்ணிக்கிடந்தான். பாசறைக்கு வந்த கடிதத்தை மறுபடியும் படித்துப் பார்த்தான். கருங்கடல் சங்கமுகத்திலிருந்து பெர்க்ளீஸ் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தான். பெற்ற பிள்ளையாக இருந்தாலும் அவனிடம் போய் மன்னிப்புக் கேட்டுவிடத் தோன்றியது அவனுக்கு. அன்றிரவே கிளம்புவதற்கு ஆயத்தப்பட்டுவிட்டான்.

புறப்படப்போகும் சமயம் டிராக்கோ தலைவிரி கோலத்துடன் தந்தையைக் காணவந்தான். அவன் கையில் சுருண்ட நெடுங்கூந்தல் இருந்தது.

"டிராக்கோ!" உணர்ச்சியோடு அழைத்தான் மன்னன் கிளிஸ் தெனீஸ்.

"அப்பா! தீர்த்துவிட்டேன் அவளை! இதோ அவள் கூந்தல்!" என்றான் டிராக்கோ.

மன்னனுக்கு மனங் கலங்கியது. துடித்துப் போனான்.

"நல்லது செய்தாய் மகனே!" என்று தளதளத்த குரலில் சொல்லி அவனை அனுப்பிவைத்துவிட்டு வண்டியில் ஏறினான்.

வண்டி காடு மலை கடந்து போய்க்கொண்டிருந்தது, ஆடாமல் அசையாமல் கட்டிப்போட்ட பிணத்தைப் போல் மன்னன் அதில் உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளம் உலகத்தைச் சுற்றிக்கொண்டிருந்தது. ராசபோகத்தில் திளைத்திருந்த தனது மகன் கடந்த மூன்று நான்கு திங்கள்களாக என்னென்ன அலலற்படுகிறானே என்ற தீராத வேதனை மன்னனை அடிக்கடி மண்டையில் அடித்து சுயநினைவு பெறச்செய்தது.

பொழுது விடிய மன்னன் வண்டி கருங்கடலைக் கண்டது. அலைகடல் இரைச்சல் அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை அதைவிடப்பேரிரைச்சலைப் போர்க்களங்களில் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டவை.

"பெர்க்ளீஸ் பெர்க்ளீஸ்!" என்று கூவிக்கொண்டே கிளிஸ் தெனீஸ் கடற்கரையில் இறங்கினான். சிறிது நேரத்திற் கொருமுறை திரும்பக் கூவினான்.

நாடாளும் கிளீஸ்தெனீஸ் நாதியற்றவனைப்போல முன்னும் பின்னும் யாருமில்லாமல் மனித சஞ்சாரமற்ற கடற்கரையில் நடந்துகொண்டிருந்தான். கொஞ்சதூரம் நடந்து சென்ற பிறகு மணற் பரப்பில் அவனுக்கு எதிர்த்திசையில், இரண்டு நாட்களுக்குமுன் நடந்து சென்ற பாதச் சுவடுகள் தெரிந்தன. கிளிஸ் தெனீஸ் அந்தச் சுவடுகளைப் பின்பற்றிப்போனான். போகப் போக அந்தச் சுவடுகள் மறைந்துவிட்டன.

மணற்பாங்கு மறைந்து ஒரு காடு வந்தது. காட்டைக் கடந்ததும் ஒரு பரண் தெரிந்தது. தேவாலயத்திற்கு முன்னால் மண்டியிட்டு அருள் பிச்சை கேட்கும் பக்தனைப்போல் அந்தப் பரணுக்குமுன் நின்று "பெர்க்ளீஸ் பெர்க்ளீஸ்" என்று கூவினான் மன்னன். யாருமில்லை. கிளீஸ் தெனீஸ் அந்தப்பரணைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒன்றும் புலப்படவில்லை. எட்டியிருந்த ஒரு மரத்தின்மீது ஏறிப் பார்த்தான். பெர்க்ளீசின் ராஜ உடை பரணில் தொங்கியது. கிளிஸ் தெனீசுக்குப்போன உயிர் மீண்டது போலாயிற்று மகனைக் கண்டுவிட்டதாகவே அவன் கருதினான். தள்ளாத வயதில் பொல்லாத சண்டையில் உழைத்துவிட்டு வந்திருந்த கிளிஸ் தெனீஸ் திக்கித் திணறிக்கொண்டு பரணில் ஏறினான். அங்கே பெர்க்ளீஸ் இல்லை. அவனுக்குப் பதிலாக ஒரு அறிவிப்பு ஓலை இருந்தது.

"இது மானிட வர்க்கத்திற்கு மனம் வெதும்பி எழுதிய ஓலை. ஏ மனிதப் பிறவியே. நீ எதன்மேலும் அதிகப்பற்றுக் கொள்ளாதே! அதன் பிரிவை உன்னால் தாங்கவே முடி

யாது! கோடான கோடி இன்பங்களைச் சுமக்கும் இதயத்திற்கு ஒரு சிறிய துன்பத்தைக் கூடத் தாங்குவதற்குப் பலமில்லை. என் : கதை அதற்கு உபகதை! ஒரு சுகத்தை எண்ணி பிற சுகங்களைத் துறந்தேன்—தியாகம் செய்தேன். தியாகத்திற்கு மதிப்பில்லை; அழுகிய பொருளாய் அப்புறப்படுத்தப்பட்டது! எந்த சுகத்தைப்பெற நான் வாழ்ந்தேனோ அந்த சுகம் கிடைக்காது போய் விட்டது, எவளுக்காக மாளிகைகளைத் துறந்து மரக்கூடாரங்களில் வாழக் கிளம்பினேனோ அவள் சாகடிக்கப்பட்டாள். கடினச் சித்தமுள்ள அரசியல் தாயக்கச்சேரியின் கதாநாயகர்களால் கொல்லப்பட்டு விட்டாள்.

"மானிடனே, நீ தர்மத்திற்காக வாழ்ந்தால்—மற்றவர் மனம் துன்புறுவது கண்டு கலங்கிப் பிழைத்தால் உன் வாழ்வு ஈடேற ஒரு போதும் மார்க்கம் பிறக்காது. எதிரி மனம் புண்பட்டால் வெற்றி உன்னை எதிர்கொண்டழைக்கிறது என்று நினைத்து வாழு! வறுமை உணராத ராஜ வம்சத்தில் பிறந்தும் வாழ முடியாத சோகமுனைக்கு இழுத்து வரப்பட்டுவிட்டேன். வாழ்க்கைக்கு செல்வமல்ல முக்கியம்! உடன் பிறந்தார் சுற்றத்தார் அல்லர் துணைவர்கள்! யாரையும் நம்பாதே! எவர் மீதும் இரக்கம் கொள்ளாதே! நல்லவர்கள் வாழ்ந்தார்களா என்றால்—நீதிமான்கள் கௌரவிக்கப்பட்டார்களா என்றால்—சான்று காட்டச் சம்பவமில்லை. நான் போகிறேன். மனிதனாக நான் போகிறேன். உலகமெல்லாம் புகழும் தமிழ்நாட்டுக்குப் போகிறேன். என்நாடு — என்னைப் பெற்ற பொன்னாடு என்னை மறந்த பிறகு வருகிறேன்.

போகும் வழியிலே ஒரு ஜீவனைச் சந்தித்துவிட்டுப் போக இருக்கிறேன். எந்த மூட நம்பிக்கை இதுவரை வீரம் செறிந்த இந்தக் கிரேக்கத்தைத் தின்றுகொண்டிருக்கிறதோ அந்த மூட நம்பிக்கையின் மூல புருஷனை—கிரேக்கத்தின் டெல்பியைச் சந்தித்துவிட்டு போக இருக்கிறேன்.

"இந்த ஓலையைப் படித்தவர்கள் அன்புகூர்ந்து கெல்லாஸ் நாட்டு மன்னனுக்குத் தகவல் கொடுங்கள்! உன் இளைய மகன் வேண்டுகோளை நிறைவேற்ற மறுத்து அவன் காதலியைத் தூக்கிலிட்டதற்காகத் தூர தேசம் போய்விட்டதாகக் கூறுங்கள்.

இங்ஙனம்,
பெர்க்ளீஸ்,
கெல்லாஸ் அரண்மனை இளவல்.

கிளிஸ்தெனிஸ் எப்படியோ இந்த ஓலை முழுவதையும் படித்துவிட்டான்.

"ஐயோ மகனே பெர்க்ளீஸ்" எனக் குய்யோ முறையோ என்று கதறினான். கிழப்பருவம். உணர்ச்சிப் பிரவாகத்தை அவனால் தாங்க முடியவில்லை. பொத்தென்றுபரணில் விழுந்தான். அரண்மனையா அது? கொலுமண்டபமா? அது? அழுது அழுது இளைத்தாலும் யாரென்று கேட்க நாதியில்லாத வனாந்தரம். அங்கு கிளிஸ் தெனீசின் வீரத்திற்கு உவமை காட்டும் புலியுண்டு, சிங்கமுண்டு!! வேறு என்ன உண்டு?

* * *

டெல்பியில் கந்தகப் புகை எழும்பிக் கொண்டிருந்தது. டெல்பி குரு— அந்த எழில் வனிதை அந்தப் புகைக்குள் கண்களைமூடிக்கொண்டு தவக்கோலத்தில் இருந்தாள்.

பேராண்மை மிக்க பெர்க்ளீஸ்—ராஜகுல இளவல் ஆண்டியைப் போல் மண்டபத்திற்குள் வந்தான். சில்லரைத் தேவதைகள் அவனை வழிமறித்து விசாரணை நடத்தின.

"பண்டாரங்களுக்கும் பரதேசிகளுக்கும் இங்கு வேலை இல்லை' என்று சிரித்தார்கள். அவர்களுடன் பெர்க்ளீசும் சிரித்தான். 'பைத்தியம் பைத்தியம்' என்று இகழ்ந்தனர்.

"பண்டாரக் கூட்டமே, என்னை இக்கதிக்கு ஆளாக்கிய 'உங்களது பெரிய பண்டாரத்தைக் காணப் போகிறேன். எனக்கு வழி விடுங்கள்! கடைசி முறையாக அவரைப் பார்க்க அனுமதியுங்கள். நான் உங்களைப்போல் பஞ்சத்திற்கு ஆண்டியுமல்ல பரம்பரை ஆண்டியுமல்ல! நான் பெர்க்ளீஸ்—கெல்லாஸ் நாட்டு ராஜகுமாரன்!! என்றான் பெர்க்ளீஸ்.

வழிமறித்த ஆண்டிக் கூட்டம் நடுநடுங்கிப்போனது. அவர்களில் ஒருவன் உள்ளே ஓடிப்போய் டெல்பிக்குத் தகவல் தந்தான்.

"வரட்டும்! வரட்டும்! இளவரசன் வருவான் என்று எனக்குத் தெரியும் சீடா கந்தகப்புகையை நன்றாக மூட்டு! பால்போல் புகை வரட்டும்" டெல்பி அவனுக்குப் பதில் கூறினாள்.

பெர்க்ளீஸ் ரதத்தைப்போல் நகர்ந்துடெல்பிக்கு எதிரே நின்றான். முதலில் டெல்பியே பேச ஆரம்பித்தாள்.

"பெர்க்ளீஸ்!"

சிரித்தான்பெர்க்ளீஸ்!

"பெர்க்ளீஸ்! கெல்லாஸ் சிங்கமே எல்லாம் முடிந்ததா? என்ன இப்படி வருகை தந்திருக்கிறீர்கள்!" என்று அலட்சியமாக வார்த்தைகளைத் தொடுத்தாள் டெல்பி.

"டெல்பிச் சாமியாரே, ஆண்டுகள் பலவாகத் தாண்டவம் புரிந்து வரும் இந்த மடாலயத்திற்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது! சிங்கக் கூட்டத்தையும் சிலிர்த்து வரும் வேங்கையின் அணிவகுப்பையும் சிதறவடிக்கும் கிரேக்க தேசம், கேவலம், கண்பட்டால் தலை குனிந்து, கணை தொடுத்தால் வெருண்டோடும் ஒரு கன்னிப்பெண்ணின் கட்டளைக்குத் தலை தாழ்த்தி நிற்கிறது! பெண்ணே, இது சம்பிரதாயங்களுக்கு அஸ்தமன காலம்! கோழையின் நீதியைக் கொடியவனின் வலிமை விரட்டி அடிக்கும் அதர்மக் காலம்! உனக்கு இனி வாழ்வில்லை! சுகமில்லை!" என்று அனல் கக்கினான் பெர்க்ளீஸ்.

டெல்பிப் பெண் மீண்டும் மீண்டும் சிரித்தாள். ஆண்மையைக் கவிழ்க்கும் நளினம் — நினைவைக் குலைக்கும் சாகசம்—அந்தச் சிரிப்பில் பின்னிக் கிடந்தது.

"பெர்க்ளீஸ், ஏன் இப்படிச் சீறுகிறாய்? என்ன நடந்தது? போரில் கூட உன் நாடுதானே வென்றது! பிறகும் ஏன் பிதற்றி நிற்கிறாய்?

' டெல்பிப் பெண்ணே! அன்றொரு நாள் அண்ணன் தந்தை முன்னிலையில் ஆவேசமாகப் பேசி ஆருடம் கூறிச் சபதம் செய்ததை மறந்து விட்டாயா?"பெர்க்ளீஸ் கேட்டான்.

"ஆமாம். சபதம் செய்தேன். அதில் நான்தானே வெற்றி பெறப் போகிறேன். இன்றைக்கும் கூறுகிறேன், நீ ஒரு மன்னனாகப் போகிறாய் என்று. மறுபடியும் சபதம் செய்கிறாயா" டெல்பி மறுபடியும் குறும்பாகப் பேசினாள்.

"போதும் உன் சபதம்! நீ தோற்றுவிட்டாய்" வெற்றி எனக்குதான் கிடைத்துவிட்டது. இன்றோடு என் வாழ்வு முடியப் போகிறது. நான் சாகப்போகிறேன். முதலில் தோல்வியை ஒப்புக்கொள்! எனக்கு நேரமாகிறது!"—பெர்க்ளீஸ் துடித்தான்.

"தோல்வியா, யாருக்குத் தோல்வி."

"உனக்குத்தான் தோல்வி, வெற்றி எனக்கு!! நான் ராஜா ஆவேன் என்று நீ சொல்லவில்லையா என் தலையில் முடி நிற்கும் என்று கூறவில்லையா? எங்கே உன் ஆருடம் எங்கே உன் சக்தி? பெர்க்ளீஸ் மீண்டும் முழங்கினான்.

"ஆத்திரப்படாதே அரசகுமாரா! உன்னைப்போல் மனம் வெந்து சாம்

பலாகி இறுதிக் கட்டத்திலேதான் நான் டெல்பியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அழகும் புகழும் இணைந்திருந்தால் கிரேக்கத்தில் டெல்பியாக வரலாம் என்ற பொதுச்சபையின் தீர்மானம் என்னை இங்கு அமர்த்திவிட்டது. என்னை நீ அறியமாட்டாய்! நான் ஒரு காலத்தில் தேசாலி தேசத்தில் புகழ்பெற்ற நாடகக்காரி. உன் அண்ணன் டிராக்கோவை ஒருமுறை சந்தித்தேன். அவருடைய வீரமும் கீர்த்தியும் என்னைக் கவர்ந்துவிட்டன. என்னால் அவரை மறக்கவே முடியவில்லை. பலமுறை அவரை அணுகி என்னுடைய காதலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினேன். வணங்கிக்கேட்டுக்கொண்டேன். ஆனால் டிராக்கோ, "உன்னைப் பிடிக்கவில்லை உன்னுடன் நடிக்கும் ஜூனோவைத்தான் எனக்குப் பிடிக்கிறது" என்று கூறிவிட்டார். ஜூனோ எனது சக நடிகை. டிராக்கோதான் ஜூனோவை விரும்பினாரே தவிர, ஜூனோ அவரை விரும்பவில்லை. அவள் ஒரு நடிகனையே விரும்பினாள். டிராக்கோ அவள் மீதுள்ள வெறியால் அவனைக் கடத்தி ஒரு காட்டரண்மனையில் கிடத்தி விட்டான். இறுதிவரை அவள் அவனை ஏற்கவில்லை.

"உன் அருமைக் காதலி அல்பாஷியாவைத் தீர்த்துக்கட்டி விடும்படி ஆத்திரத்தில் உன் தந்தை டிராக்கோவிடம் கட்டளை இட்டுவிட்டார்.

டிராக்கோ அவனைக் கொல்லாமல், ஜூனோவை வைத்திருந்த அதே காட்டரண்மனைக்குக் கொண்டு சென்று அடைத்துவிட்டான். அங்கிருந்த ஜூனோ, இதை அறிந்து அல்பாஷியாவை தப்புவிக்கச் செய்தாள். அன்றிரவு அல்பாஷியாவை காணாமல் தவித்த டிராக்கோ ஜூனோவின்மீது ஆத்திரங்கொண்டு அவனை வெட்டி வீழ்த்திவிட்டான். அவனுடைய தலைமுடியை எடுத்துக்கொண்டு போய் "இதுதான் அல்பாஷியாவின் தலைமுடி" என்று உன் தந்தையிடம் காட்டிப் பெருமை பெற்றான். பெர்க்ளீஸ், என் வாழ்க்கை உன்னைவிடச் சோகம் நிறைந்தது. கண்ணீர் பெருகியது. நானும் காதலால் ஏங்கிச் செத்தவள்தான். இன்று இப்படி இருக்கிறேன்" என்று குரல் நடுங்கக் கூறினாள்.

"டெல்பி! டெல்பி! அப்படியானால் என் அல்பாஷியா சாகவில்லையா? இன்னும் இருக்கிறாளா?" ஆசையோடு கதறினான்.

"ஆம். அவள் சாகவில்லை என்னுடைய பாதுகாப்பில்தான் இருக்கிறாள். வருவாள் பொறு!" என்று கூறி கையைத் தட்டினாள். சீடர்கள் ஓடி வந்தார்கள். "அல்பாஷியை அழைத்து வாருங்கள்" என்று கட்டளை இட்டாள்.

முத்துப் பல்லக்கைப்போல் ஆடி, அசைந்து, அடிமேல் அடியெடுத்து வைத்து பெர்க்ளீசுக்கு அருகில் வந்து நின்றாள். அல்பாஷியா பெர்க்ளீசுக்கு மயிர் சிலிர்த்தது.

பார்த்தான்—கூர்மையாகப் பார்த்தான்!

அவள் சிரித்துத் தலைகுனிந்தாள்.

பெர்க்ளீஸ், ஆருடம் ஆருடம் என்று அலறினாயே! ஆருடமா அது அல்பாஷியாவின் தந்தை தன் மகளை உனக்குத் தந்து, உன்னையே தெசாலியின் தலைவனாக்க எண்ணி என்னிடம் அனுமதி கேட்டார். நானும் கொடுத்தேன். உங்களுடைய காதல் சந்திப்பை ஒருமுறை அவர் பூங்காவில் கண்டதின் விளைவு அது! அதை வைத்துத்தான் நீ ராஜாவாகப் போகிறாய் என்றேனே தவிர ஆருடமல்ல! என்னை அலைக்கழித்த உன் அண்ணன் இதயத்தைப் புண்படுத்த நான் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டேன். ஆனால் நீயோ கொதித்துவிட்டாய்! அண்ணனுக்கு இல்லாத பட்டம் எனக்கென்ன என்று வீறிட்டு எழுந்துவிட்டாய். நீ ராஜாவாகப் போகிறாய் என்றேனே தவிர, நீதான் கொல்லாசுக்கு ராஜவாகப் போகிறாய் என்று சொன்னேன் என்று டெல்பி அழுதுகொண்டே சொன்னாள். எதிரே நின்ற அல்பாஷியாவும் பெர்க்ளீசும் தேம்பி நின்றார்கள்.

"பெர்க்ளீஸ்! எனக்காக நீ, தெசாலியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது எனது வேண்டுகோள்! ஆசை! உலகத்தின் எந்த சுகத்தையும் அறியாத ஒரு அபலை வேண்டுகிறேன். நான் இனிச் சுகம்பெறப்போவதில்லை. யாரையும் காதலிக்கப் போவதில்லை. எனது பதவிக் காலம் முடிந்ததும் என் நிலை என்னவாகும் என்பதை இன்னும் என்னால் முடிவுகட்ட முடியவில்லை. போய்வாருங்கள்! வாழ்க உங்கள் காதல்!"

டெல்பியின் வாழ்த்துதலோடு பெர்க்ளீசும் அல்பாஷியாவும் கை கோர்த்து வெளியில் வந்தார்கள்.

டெல்பியில் கெந்தகப் புகை அதிகரித்தது. உள்ளே இருந்து டெல்பிப் பெண்ணின் அழுகுரல் அலை அலையாக மிதந்து வந்தது.

[முற்றும்]

## வள்ளுவர் பேசுகிறார்!



இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(குறள்—539)

மகிழ்ச்சியினால் மயங்கிக் களிக்கின்ற அந்த நேரத்தில் — (அந்த மகிழ்வு நெடிதாகவும் நிலைத்தும் இருக்கும் பொருட்டு) இகழ்ச்சி பேசிக் கெட்டுப்போனவரை (காங்கிரசாரை) நினைத்துக்கொள்க!

# கேள்வி ? பதில்

**1. கழக அரசின்மீது அண்மையில் காங்கிரஸ் கொண்டுவந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு 37 காங்கிரஸ்காரர்கள்தானே வாக்களித்திருக்கிறார்கள்! இதிலிருந்து தெரிவதென்ன?**

காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் 49 பேரில் 12 பேர், காங்கிரசின் அந்த தீர்மானத்தை விரும்பவில்லை என்று தெரிவதுடன், சட்ட மன்றக் காங்கிரசுக் கட்சிகூட பிளவுபட்டுக் கிடக்கிறது என்றும் தெரிகிறது. காங்கிரஸ் ஒன்றினாலேயே நாட்டின் ஐக்கியத்தைக் காக்க முடியும் என்ற கூச்சலுக்குக் கிடைத்த விளக்கம் அது என்றும் தெரிகிறது.

**2. தனக்குள்ள 'கொஞ்சம்' செல்வாக்கைக் கொண்டு கழக அரசுக்கு, மத்திய அரசிடமிருந்து பணவுதவி பெற்றுத் தரமுடியும் என்று சுப்பிரமணியம் சொல்கிறாரே! முடியுமா?**

சுப்பிரமணியமாவது மத்திய ஆளும் கட்சியின் ஒரு மாநிலக் கிளையின் தலைவர்! அமைச்சராக இருந்த செல்வாக்கு இன்னமும் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையில் அப்படிப் பேசி இருக்கலாம்! சாதாரண ஒரு காங்கிரஸ் தொண்டர், கழகத்தையே, மத்திய அரசைக் கொண்டு 'தொலைத்துவிடுவேன்' என்று முழக்கமிடுகிறாரே தெரியுமா? இதெல்லாம் இருந்ததை இழந்த எரிச்சலில் எடுத்தெறியப்படும் வார்த்தைகள்! ஆழமான பொருளை நுணுகி ஆராயத் தெரியாத மடமையின் விளைவுகள்! பேசிவிட்டுப் போகட்டுமே!

**3. அறிஞர் அண்ணா அவர்கள் திரும்பி வரும்வரையில் காங்கிரசுக் கட்சி எந்தக் கிளர்ச்சியிலும் ஈடுபடாது என்று சுப்பிரமணியம் கூறுவது பெருந்தன்மையில்தானே?**

பெருந்தன்மையில்தான் என்று நம்புவோம்! சுப்பிரமணியம் காங்கிரசுக்குத்தான் தலைவர், காங்கிரஸ்கட்சி இப்போது செயலற்று இருப்பதனால், அதன் செயல் வேகத்தை முடுக்கிவிட(!), இளைஞர் காங்கிரஸ் என்ற காமராசரின் அணிதானே போராட்டம் பிரளயம், கிளர்ச்சி இவைகளை நடத்திக்கொண்டிருக்கிறது. காமராசர் மீதும் அவரது காலடி ஆழ்வார்கள் மீதும் கொஞ்சம் பார்வையை ஓட்டுங்கள். பெருந்தன்மை எந்த 'நிலையில்' இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்!

**4. பருக்மரைக்காயரின் அமைச்சரவை பாண்டிச்சேரியில் அமைய கவர்னர் ஒத்துழைப்பாரா?**

கடந்த மாதத்தில் சட்டமன்றத்தை ஒத்திவைத்ததே டெல்லி அரசைக் கேட்டுத்தானும்! இப்போதும் டெல்லி சம்மதித்தால்தான் கவர்னர் பருக்மரைக்காயரை அழைப்பாராம்! கவர்னர்கள் டெல்லியின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்கள் என்ற குற்றச்சாட்டினை மெய்ப்பிக்க இதுவும் ஒரு சான்று! கவர்னர் ஜனநாயக நெறிப்படி செயல்படுவதென்றால் கடந்த 29-ம் தேதியே பருக்மரைக்காயரை அழைத்து அமைச்சரவை அமைக்கக் கோரி இருக்கவேண்டும். ஜனநாயகத்துக்கும் காங்கிரசுக்கும் ஒட்டும் இல்லை—உறவுமில்லையே!!

**5. மனிதனுக்கு விருப்பமில்லாதது எது?**

இருப்பதை இழக்க—கிடைப்பதை தடுக்க—உயிரை விடுக்க!

**6. கோயில் விக்கிரகங்கள் அதிகமாகக் களவாடப்படுவது ஏன்?**

நிச்சயம், அதில் மொரார்ஜியின் சட்டம் குறுக்கிட முடியாது என்பதனாலோ என்னவோ!

**7. தமிழ்ப் பயிற்சிமொழி எதிர்க்கப்படுவது எதனால்?**

கல்விக் கொள்கையை, அரசியல் கொள்கையாக்கி எதிர்காலத்தை இருட்டுக்குள் மூழ்கடிக்க மேற்கொள்ளப்படும் அரசியல் சதி இது. தமிழ் உணர்வு நாட்டு மக்களிடத்தே பரவி இருப்பதனால்தான் கழகம் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது என்பது காங்கிரஸ் கட்சியின் மேலிட முடிவு என்றுத் தெரிகிறது. அதனைத் தடுக்க வேண்டுமானால், இந்த வழியில் மாணவர்களைத் தூண்டிவிடுவதைத் தவிர வேறுவழி இல்லை. தமிழ்நாடு, எதிர்காலத்தில் "இந்தி"க்காரர்களுக்கு அடிமையாகியே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுவோரை என்ன செய்ய முடியும்?

★

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

கட்சி வளர வளர பிரச்னைகள் உண்டாவதனைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. உண்டாக்கப்படும் பிரச்னைகளில் உரிமை முழக்கம் இருக்கக்கூடும்! பொதுப்பணி ஆர்வம் காரணமாக பதவிப் பிடிப்பும் இருக்கக்கூடும். இதற்கும்கூட முன்னர் கூறிய குறட்பா பொருந்தும் இல்லையா!

எனவே நண்பா, அண்ணன் அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்துவிட்டு நல்ல செய்திக்காகக் காத்திருக்கும் நாம், விழாவெடுக்கின்ற இந்த நல்ல சூழ்நிலையிலேயே, சாலமிகுத்துப் பெயும் பீலி பற்றியும் எண்ணிச் செயல்பட வேண்டும்! அது ஒன்றுதான் அண்ணனுக்கு நம் நன்றிக் கடனை ஒழுங்காகச் செலுத்தியதாகும்.

அடுத்த ஆண்டு வரப்போகும், மணி விழாவுக்கு இந்த ஆண்டு விழாக்கள் முன்னோடியாக அமையட்டும்! அமைதியாக நடைபெறட்டும்! அண்ணன் மகிழும்படியாக இருக்கட்டும்! அண்ணனுக்கு அறுபது என்பது அதைத்தானே நண்பா உணர்த்துகிறது!

அன்புள்ள,

**திருவாரூர்-முத்துராமன்,**

# காஞ்சி

## 4-ம் ஆண்டு மலர்

வந்தால்-தந்தால்-தருவேன்!

(அமைச்சர் மா. முத்துசாமி)

அரிமா நோக்கு!

(என். வி. நடராசன்)

விரலுக்குத் தக்க வீக்கம்!

(மா. கி. தசரதன்)

எனது பயணம்!

(அரங்கண்ணல்)

மெய்யறிவு!

(அ. மு. பரமசிவானந்தம்)

இரவு என்ற குருவி!

(சோமு)

ஆக..! ஜப்பான்!

(அண்ணல்)

இரட்டைக் கொலை!

(எஸ். எஸ். தென்னரசு)

காங்கிரஸ் அகில இந்தியக் கட்சியா?

— எஸ். ஆர்.

முதலான கருத்துக் கருவூலங்களோடு

அறிஞர் அண்ணாவின்
அமெரிக்கப் பயணத்தில்...!

என்ற தலைப்பில் அண்ணாவின் தனிச் செயலாளர் கு. சொக்கலிங்கம், I A S. அவர்களது புதிய செய்திகளோடுகூடிய சிறப்புக் கட்டுரையும்

அறிஞர் அண்ணா அவர்கள்

படைக்கும் நீதிச்சுவைக் காப்பியங்கள் பலவோடு

தயாராகிறது!


# ரத்தக்கண்ணீர் வடிக்கிறேன்!

"ஒருமைப்பாடு என்பது பல கட்டங்களில் அமைவது. உலகோர் அனைவரும் ஒருமைப்படுவது வேறு—கண்டத்தால் ஒருமைப்படுவது வேறு—நாட்டால் ஒருமைப்படுவது வேறு — இனத்தால் ஒருமைப்படுவது வேறு. அதிலும் பண்புவழி ஒருமைப்படுவது வேறு—பகைவழி ஒருமைப்படுவது வேறு.

ஒருமைப்பாட்டோடு இருங்கள் என்பது வேறு ஒற்றுமையோடு இருங்கள் என்பது வேறு. ஒரு கட்சியில் இருக்கும் இரு கோஷ்டியினருக்கும் அடிக்கடி தகராறு ஏற்படும்போது ஒற்றுமையோடு இருங்கள் என்று சொல்லவேண்டும். ஒருமைப்பாடு என்பது பல கட்சியினரும் ஒரு விஷயத்தில் இணங்கி இருப்பது. இரண்டுக்கும் வேறுபாடு தெரியாமல் ஒருமைப்பாட்டைப்பற்றிப் பேசுகின்ற சிலருக்குச் சொல்வேன். நீங்கள் ஒற்றுமையோடு இருக்கப் பாருங்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஐரோப்பியரை எதிர்ப்பதற்காக டோக்கியோவின் தலைமையில் ஆசியா முழுவதும் ஒன்றுபடவேண்டுமென்று ஜப்பான் கூறியது. அது உணர்ச்சி வழிப்பட்ட ஒருமைப்பாடு. ஆனால் அறிவு வழிப்பட்ட ஒருமைப்பாடு வேறு. நமக்கு அறிவு ரீதியான ஒருமைப்பாடுதான் வேண்டும். நாம் தமிழராக இருக்கவேண்டும்; அதே நேரத்தில் இந்தியாவின் கூட்டுறவில் இருக்கவேண்டும்.

வடக்கே இருந்து ஆரியர்கள் வந்தார்கள்—மௌரியர்கள் வந்தார்கள். இஸ்லாமியர்கள் வந்தார்கள். இப்படி அரச பாரம்பர்யத்திலுள்ளவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். மதத்தை எடுத்துக்கொண்டாலும் அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் என்று பல மதங்கள் வந்தன. இப்பொழுது தென்னாட்டில் திருடுவதற்குக்கூட வடக்கே இருந்துதான் ஆள் வருகிறது. இதிலே கூடவா வடக்கிற்கு ஆசை?

வடக்கிலிருந்து தெற்கே யார்வேண்டுமானாலும் வரலாம். அரசரானாலும் வரலாம். அரசியானாலும் வரலாம். ஆனால் வாலாட்டக்கூடாது. வாலாட்டினால் வாலறுந்துவிடும். இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வடக்கே வாழ்ந்த வால்மீகிக்குத் தெரிகிறது. இன்றைக்கு வடக்கே வாழ்பவர்களுக்குத் தெரியவில்லை.

கண்ணகிக்குக் கல்லெடுப்பதற்காக செங்குட்டுவன் வில்லெடுத்துச் சென்றபோது 'இமயத்தில் உன் படைவீரர்கள் வெற்றிக்கொடி நாட்டுவார்கள் நாட்டினாலும் அங்கு வாழ்கின்ற முனிவர்களுக்கு ஊறு தேடக்கூடாது என்று சேரனிடம் ஒரு முனிவர் கூறுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார். இங்கேதான் இவர் ஒருமைப்பாட்டை விளக்குகிறார்.

இந்த இரு கவிகள் கண்ட கனவும் நனவாகியிருந்தால் இங்கு இந்திப்பள்ளிக்கூடம் திறக்கலாமா என்று மத்திய அரசு எண்ணாது. ஒருமைப்பாடு எனும்போது அதில் உரிமைப்பாடும் இருக்கவேண்டும்.

ஆங்கிலம் வேண்டாமென்றால் உலக நாடுகளுக்கும் போகவேண்டாமா என்கின்றனர். யார் ஆங்கிலம் வேண்டாமென்று சொல்கிறார்கள். தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் முன்பு அமெரிக்கா செல்

ROCKFORT
BRAND
DALMIA
CEMENT

இப்பொழுது
தாராளமாகக் கிடைக்கிறது
கட்டுப்பாடுகள் ஒன்றும் இல்லாமல்

A DALMIA ENTERPRISE

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபிஸ் அண்டு வொர்க்ஸ்: டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)
ஸோல் ஸெல்லிங் ஏஜன்ட்ஸ்: சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட
டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)

லும்பொழுது 'நான்சரியாகவோ தவருகவோ ஆங்கிலத்திற்குப் பகையாகக் கருதப்படுகிறேன். உங்கள் ஆங்கிலப் புலமை தமிழுக்கு மெருகேற்றும். சென்று வாருங்கள்' என்றேன்.

அன்ெருரு நாள் அயர்லாந்தில் சத்தியமூர்த்தி அவர்களது ஆங்கில உரையைக் கேட்டவுடன் உங்கள் நாட்டிலே நீங்கள்தான் தலைசிறந்தபேச்சாளரோ! எங்களால்கூட இப்படிப் பேசமுடியாது போலிருக்கிறதே என்று வியந்தார்களாம்.

அத்தகைய சத்தியமூர்த்திக்குள்ள ஆங்கிலப் புலமையை நான் அண்ணு அவர்களிடம்தான் காணுகிறேன்.

பொறியியற் கல்லூரியில் தமிழில் படிக்க முதலில் சிரமமாகத்தான் இருக்கும். மதுவிலக்கு எடுக்கப்பட்ட காலத்தில் அதனல் இலட்சக்கணக்கான பேர் வேலையிழந்தபோது ஏன் எடுத்துவிட்டாய் என்று யாரும் ஊர்வலம் வரவில்லை.

ஆனல் ஆங்கிலம் பயிற்சி மொழியாக இல்லை என்பதற்காக தமிழின மாணவர்கள் ஊர்வலம் போகும் கொடுமையைக் கண்டு எங்கள் கண்கள் ரத்தக்கண்ணீர் வடிக்கின்றன. எப்படி அவர்கள் ஊர்வலம் போயிருக்க வேண்டும்? எந்தவிதத்தில் செய்தாலும் எதிலும் தமிழை மீடியமாக்குங்கள்—எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்சி மொழியாக்குங்கள் என்று போராடியிருந்தால் நானும் அதில் கலந்துகொண்டிருப்பேன். நாடு நல்வழியில் செல்ல வேண்டுமானல் சிலருக்கு அழிவு வரத்தான் செய்யும்.

உங்களுக்கு நான் சொல்லிக்கொள்வேன். உங்கள் தாய்மொழிக்காக உங்களை நீங்கள் தியாகம் செய்யுங்கள் இல்லையென்ருல் நம் இன்ப வாழ்வைப் பறிகொடுக்க நேரிடும்.

நாம் இந்தி ஒழிக என்று சொல்லவில்லை. இந்தித் திணிப்பு ஒழிக என்றுதான் கூறுகிருேம், தமிழக அரசு தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இந்தியில்லை என்றது. மத்திய அரசே பள்ளிகளைத் திறக்கிறது, மத்திய அரசை எதிர்த்து இந்தியை இங்கு வரவொட்டாமல் செய்ய நமக்கு அதிகாரமில்லை. ஆதலால் அதிகாரம் பெற டில்லியுடன் போராட நாம் எந்த நேரத்திலும் தயாராக இருக்கவேண்டும். ஆதலால் கையிலிருக்கிற அதிகாரத்தை வைத்து இல்லாத அதிகாரத்திற்கு ஊர்வலம் வாருங்கள்!

மாநில சுயாட்சிக்கு...தமிழ் ஆட்சிக்கு தமிழ் நாட்டின் உயர்வுக்கு...தமிழர்களின் வாழ்வுக்கு...நான்நம்பியிருக்கும் நம்பிக்கைச் சின்னம் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள்தான். அவர்கள் உடல் நலம்பெற்று வலிவோடு புதிய பொலிவோடு திரும்பிவர தமிழ்த் தாயிடம் வேண்டுகோள் விடுத்துப் பிரார்த்திக்கின்றேன்.

(சென்னைக் கூட்டத்தில் ம. பொ. சி.)

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்—8
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.